அந்தரங்கமானது

# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை – 2022(2023)

## 25 - இலங்கை வரலாறு

### புள்ளியிடும் திட்டம்

இந்த விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்திற்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளப்படும் கருத்துக்களுக்கேற்ப இதில் உள்ள சில விடயங்கள் மாற்றப்படலாம்.

இறுதித்திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

முழுப்பதிப்புரிமையுடையது

# க.பொ.த (உ.தர)ப் பரீட்சை 2022 (2023)

## 25- இலங்கை வரலாறு

## புள்ளித்திட்டம்

பகுதி I    1 x 40 = 40

பகுதி II

| | | |
|---|---|---|
| கட்டாயவினா | - | 12 |
| ஏனைய 03 வினாக்களுக்கு 12x3 வீதம் | - | 48 |
| II பகுதிக்கு மொத்த புள்ளிகள் | - | 60 |

இறுதிப்புள்ளிகள் = 40 + 60 = 100

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது தெளிவான இலக்கத்தில் எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ △ 4/5
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ △ 3/5
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)

1. க.பொ.த.(உ.த) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடப்பட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். பத்திரம் I ற்கான பல்தேர்வு வினாப்பத்திரம் மட்டும் இருப்பின் புள்ளிகள் இலக்கத்திலும் எழுத்திலும் பதியப்பட வேண்டும்.

ooo

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022(2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022(2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022(2023)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (I කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி I)
History of Sri Lanka I (Part I)

**25 T I**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

சுட்டெண் : ..............................

அறிவுறுத்தல்கள் :

- ❊ இவ்வினாத்தாள் பகுதி I, பகுதி II ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- ❊ பகுதி I இல் 1 - 40 வரையான எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடைகளை எழுதுக.
- ❊ பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- ❊ இரண்டு பகுதிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள நேரம் மூன்று மணித்தியாலங்களாகும். விடைகளை எழுதி முடித்த பின்னர், பகுதி I இற்கான விடைத்தாள்களை பகுதி II இற்கான விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

## பகுதி I

● 1 தொடக்கம் 10 வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோவொரு காரணத்தினால் ஏனைய பெயர்களுடன் பொருந்தாது உள்ளது. அந்தப் பொருந்தாத பெயரை இனங்கண்டு, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. (1) மணிமேகலை (2) பதிற்றுப்பத்து (3) பட்டினப்பாலை
   (4) யாழ்ப்பாண வைபவமாலை (5) சிலப்பதிகாரம் (......)

2. (1) வைசிராவண (2) சித்தராஜா (3) காலவேலை
   (4) வளவாமுகி (5) சேதியா (......)

3. (1) விசுத்தி மக்க (2) சசதாவத (3) அமாவதுர
   (4) தர்மபிரதீபிகா (5) வெசதுருதா சன்ன (......)

4. (1) எருமுது வாவி (2) தோப்ப வாவி (3) திசாவாவி
   (4) பராக்கிரம சமுத்திரம் (5) தும்புத்துலு வாவி (......)

5. (1) எதிர்மன்ன சிங்கம் (2) அரித்தகிவேந்து பெருமாள் (3) குலசேகரன்
   (4) புவிராஜ பண்டாரம் (5) வரோதயன் (......)

6. (1) இரண்டாம் புவனேகபாகு (2) நான்காம் பராக்கிரமபாகு (3) மூன்றாம் புவனேகபாகு
   (4) மூன்றாம் விஜயபாகு (5) ஐந்தாம் விஜயபாகு (......)

7. (1) அதிகாரம் (2) ரட்டேரால (3) திசாவை
   (4) மொகத்தால (5) மகாமுதலி (......)

8. (1) மில்லவ (2) கலகொட (3) சமனக்கொடி
   (4) மொனரவில (5) கலகம (......)

9. (1) இரத்மலானை தம்மாலோக தேரர்
(2) ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர்
(3) வலானே ஸ்ரீ சித்தார்த்த தேரர்
(4) மொறதொட்ட தம்மகந்த தேரர்
(5) வஸ்கடுவே ஸ்ரீ சுபுத்தி தேரர் (......)

10. (1) வில்லியம் ஜே கொஸ்டர் (2) J. G. வான் அன்கல்பீரக்
(3) ஜோர்ஜி தி அல்புக்கர்க் (4) இமான் விலெம் பல்க்
(5) பாரொன் வன் ஏக் (......)

- **11** தொடக்கம் **15** வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிச் சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடியை இனங்கண்டு, அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

11. (1) மெகஸ்தினீஸ் - கிரேக்கர்
(2) பிளினி - உரோமர்
(3) மார்கோ போலோ - இத்தாலியர்
(4) இபன் பத்துதா - பாரசீகர்
(5) ஜோன் டேவி - ஆங்கிலேயர் (......)

12. (1) சகலகலா வல்லப - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
(2) புத்ததாச லபரிதேவ - குட்டபாரிந்த
(3) கலிங்க சக்கரவர்த்தி - நிஸ்ஸங்க மல்லன்
(4) ஹத்ரஜ்ஜறு பண்டார - மகாசேனன்
(5) கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டித - இரண்டாம் பராக்கிரமபாகு (......)

13. (1) கவந்தீச மன்னன் - விஹாரமகாதேவி
(2) முதலாம் விஜயபாகு மன்னன் - திரிலோக சுந்தரி
(3) முதலாம் பராக்கிரமபாகு மன்னன் - லீலாவதி
(4) முதலாம் விமலதர்ம சூரியன் - குசுமாசனதேவி
(5) இராஜாதி ராஜசிங்கன் - வெங்கடரங்கமாஸ் (......)

14. (1) இலம்பகர்ண வம்சம் - வசப மன்னன்
(2) மௌரிய வம்சம் - தாதுசேன மன்னன்
(3) கலிங்க வம்சம் - சகஸ்ஸமல்ல மன்னன்
(4) தம்பதெனி வம்சம் - மூன்றாம் விஜயபாகு மன்னன்
(5) நாயக்கர் வம்சம் - ஸ்ரீ விஜயராஜசிங்க மன்னன் (......)

15. (1) ஜோர்ஜ் வன் ஸ்பில்பேர்கன் - முதலாம் விமலதர்ம சூரிய மன்னன்
(2) ஜோன் பைபஸ் - கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன்
(3) கியூ பொயிட் - இரண்டாம் இராஜசிங்க மன்னன்
(4) ரொபெட் அன்ட்ரூஸ் - இராஜாதி இராஜசிங்க மன்னன்
(5) மக்டொவல் - ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் (......)

● **16** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் சில பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் தொகுதிகள் **X, Y** என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ளன. **Y** நிரலில் தரப்பட்டுள்ள பெயர்கள் / கூற்றுகள் / திகதிகள் **X** நிரலில் தரப்பட்டுள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவை. ஆனால் அவை சரியான தொடரொழுங்கில் தரப்படவில்லை. **Y** நிரலில் உள்ளவற்றை **X** நிரலில் உள்ளவற்றுக்கேற்ப சரியாக ஒழுங்குபடுத்தும்போது கீழே தரப்பட்டுள்ள ஐந்து சேர்மானங்களுள் **ஒன்று** சரியானதாகும். சரியான சேர்மானத்தின் இலக்கத்தைத் தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

**16.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | தோணிகல கல்வெட்டு | A | உத்திய மன்னனின் வரலாறு |
| (ii) | மிகிந்தலை கல்வெட்டு | B | முதலாம் பராக்கிரமபாகுவின் பர்மா ஆக்கிரமிப்பு பற்றிய தகவல் |
| (iii) | வேவல்கெட்டிய கல்வெட்டு | C | தானியங்கள் சேமிப்பு முறை |
| (iv) | மெதவெல கல்வெட்டு | D | புராதன நீதிமன்ற முறை |
| (v) | தேவனகல கல்வெட்டு | E | யாழ்ப்பாண இராச்சியம் கம்பளை இராச்சியம் அரசர்களுக்கிடையிலான சமாதான உடன்படிக்கை |

(1) CADEB (2) CABDE (3) CBAED (4) CDABE (5) CEDBA (......)

**17.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | 1597 மல்வானை உடன்படிக்கை | A | இரண்டாம் இராஜசிங்கனுக்கும் - ஒல்லாந்தருக்குமிடையில் |
| (ii) | 1638 மட்டக்களப்பு உடன்படிக்கை | B | கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்கும் - ஒல்லாந்தருக்குமிடையில் |
| (iii) | 1766 ஹங்குரன்ஹெட்ட உடன்படிக்கை | C | கண்டி பிரதானிகளுக்கும் - ஆங்கிலேயருக்குமிடையில் |
| (iv) | 1815 கண்டி உடன்படிக்கை | D | டி. எஸ். சேனநாயக்கவிற்கும் - பிரித்தானியருக்குமிடையில் |
| (v) | 1947 பாதுகாப்பு உடன்படிக்கை | E | கோட்டைப் பிரதானிகளுக்கும் - போர்த்துக்கேயருக்குமிடையில் |

(1) EACDB (2) EBCDA (3) ECDBA (4) EABCD (5) EADBC (......)

**18.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | இசுருமுனி விகாரை | A | முதலாம் பராக்கிரமபாகுவின் ஆட்சி |
| (ii) | கல் விகாரை | B | நான்காம் புவனேகபாகுவின் ஆட்சி |
| (iii) | கடலாதெனிய விகாரை | C | ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆட்சி |
| (iv) | பத்திரிப்பு | D | ஸ்ரீ வீரபராக்கிரமபாகு நரேந்திர சிங்கன் ஆட்சி |
| (v) | சூரியகொட விகாரை | E | தேவநம்பியதீசன் ஆட்சி |

(1) EACBD (2) EABCD (3) EBADC (4) EBDCA (5) EADCB (......)

**19.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | இலங்கை தேசிய சங்கம் | A | சார்ள்ஸ் தி சொய்சா |
| (ii) | தாழ்நில உற்பத்தி சங்கம் | B | விக்டர் கொரயா |
| (iii) | இலங்கை சமூக சீர்திருத்த சங்கம் | C | எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்க |
| (iv) | சிலாபம் சங்கம் | D | ஆனந்த குமாரசுவாமி |
| (v) | சிங்கள மகாசபை | E | பொன்னம்பலம் அருணாச்சலம் |

(1) EABCD (2) EADCB (3) EBADC (4) EBDCA (5) EADBC (......)

**20.**

| | X | | Y |
|---|---|---|---|
| (i) | வெலிவிற்ற சரணங்கர தேரர் | A | ஆங்கிலக் கல்வி |
| (ii) | கோல்புறூக் - கமரன் ஆணைக்குழு | B | பல்கலைக்கழகக் கல்வி |
| (iii) | எச். எஸ். ஒல்கொட் | C | பிக்குமார் கல்வி |
| (iv) | ஆறுமுகநாவலர் | D | இந்து கல்வி |
| (v) | ரிடில் ஆணைக்குழு | E | பௌத்த பாடசாலைக் கல்வி |

(1) CABDE (2) CBADE (3) CAEDB (4) CBEDA (5) CEDBA (......)

● **21** தொடக்கம் **25** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை எதிரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

**21.** அபயகிரி
(1) அபயகிரி விகாரை வலகம்பா மன்னனால் கட்டப்பட்டது.
(2) அபயகிரி விகாரை பிரபல்யமான கல்வி நிலையமாக விளங்கியது.
(3) பாஹியன் தேரர் அபயகிரி விகாரையில் சிலகாலம் தங்கியிருந்தார்.
(4) அபயகிரி விகாரையின் ஆரம்ப பொறுப்பாளர் திஸ்ஸதேரர் ஆவார்.
(5) திரிபிடகம் அபயகிரி விகாரையில் எழுத்துருவாக்கம் பெற்றது. (......)

**22.** கம்பளைக் காலம்
(1) மூன்றாம் விக்கிரமபாகு கம்பளைக் காலத்தில் இருந்த பலம்மிக்க ஆட்சியாளன் ஆவார்.
(2) திஸர சந்தேசய கம்பளைக் காலத்தில் எழுதப்பட்ட நூலாகும்.
(3) கம்பளை அரசன் ஆரியச்சக்கரவர்த்தியைப் பலதடவைகள் தோற்கடித்தான்.
(4) இலங்காதிலக, கடலாதெனிய ஆகிய விகாரைகள் கம்பளைக் காலத்தில் கட்டப்பட்டன.
(5) ஸ்தபதிராயர், கனேஸ்வர ஆச்சாரி ஆகிய கலைஞர்கள் இருவரும் கம்பளைக் காலத்தில் வாழ்ந்தனர். (......)

**23.** சீதாவாக்கை இராசதானி
(1) 1521 விஜயபாகு கொள்ளையின் பின்னர் சீதாவாக்கை இராச்சியம் ஆரம்பமானது.
(2) மாயாதுன்னை சீதாவாக்கை இராசதானியின் முதல் ஆட்சியாளன் ஆவார்.
(3) றைகம பண்டாரவின் மரணத்தின் பின்னர் றைகம சீதாவாக்கை இராச்சியத்துடன் இணைக்கப்பட்டது.
(4) 1582 இல் கண்டிப் பிரதேசங்களும் சீதாவாக்கை இராச்சியத்துடன் இணைக்கப்பட்டன.
(5) யாழ்ப்பாண இராச்சியத்துடனான முரண்பாடே சீதாவாக்கை இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமாகியது. (......)

**24.** கோப்பிப் பயிர்ச்செய்கை
(1) முதலாவது கோப்பிப் பெருந்தோட்டம் ஜோர்ஜ் பேர்ட் என்பவரால் சிங்கபிட்டியாவில் ஆரம்பிக்கப்பட்டது.
(2) எட்வேர்ட் பார்ன்ஸ் கன்னொருவையில் கோப்பித் தோட்டமொன்றை ஆரம்பித்தார்.
(3) 1835 இன் பின்னர் கோப்பி ஏற்றுமதி வேகமாக அதிகரித்தது.
(4) லிப்டன் என்ற வர்த்தகப் பெயரில் ஐரோப்பாவுக்கு கோப்பி ஏற்றுமதி செய்யப்பட்டது.
(5) இலை நோய் காரணமாக கோப்பிச் செய்கை வீழ்ச்சியடைந்தது. (......)

**25.** **1956** பொதுத் தேர்தல்
(1) இதுவே சுதந்திரத்தின் பின்னர் நடைபெற்ற இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் ஆகும்.
(2) பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற மக்கள் ஐக்கிய முன்னணி (மகாஜன எக்சத் பெரமுன) அரசாங்கத்தை தாபித்தது.
(3) இந்த அரசாங்கத்தின் நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜெயவர்தனா ஆவார்.
(4) சிங்கள மொழியை அரச கரும மொழியாக்குவதற்கான வாக்குறுதி பொதுத் தேர்தலில் வழங்கப்பட்டது.
(5) பிரதிநிதிகள் சபை 101 அங்கத்தவர்களைக் கொண்டதாக அமைந்திருந்தது (......)

● **26** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(A), (B), (C), (D)** என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று அல்லது பல சரியான விடையாகும். சரியான விடை அல்லது விடைகளைத் தெரிவுசெய்து,

**(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **1** எனவும்
**(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **2** எனவும்
**(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **3** எனவும்
**(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரியாயின் ........................................ **4** எனவும்
வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரியாயின் ......... **5** எனவும்
அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| அறிவுறுத்தல்களின் சுருக்கம் | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **(A)** யும் **(B)** யும் மாத்திரம் சரி | **(A)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(B)** யும் **(C)** யும் மாத்திரம் சரி | **(C)** யும் **(D)** யும் மாத்திரம் சரி | **வேறு விடைகளின் எண்ணிக்கை அல்லது சேர்மானங்கள் சரி** |

**26.** இலங்கையின் ஆரம்ப குடியிருப்புக்கள் தாபிக்கப்பட்டமை தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) வம்சக் கதைகளில் ஆரம்ப குடியிருப்பாளர்கள் வட இந்தியாவிலிருந்து இந்நாட்டிற்கு வந்தனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(B) ஆரம்ப குடியிருப்புக்கள் நதிகளை அண்மித்ததாக அமைக்கப்பட்டிருந்தன.

(C) ஆரம்ப குடியிருப்பாளர்களின் முக்கிய ஜீவனோபாயமாக விவசாயம் அமைந்திருந்தது.

(D) வம்சக் கதைகளில் காணப்படும் விபரங்களையே பாகியன் தேரரும் எடுத்துக்காட்டியுள்ளார். (......)

**27.** முதலாம் விஜயபாகுவின் சாதனைகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) சோழருக்கு எதிரான யுத்த நடவடிக்கை பொலநறுவையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டமை.

(B) சோழரை வெளியேற்றிய பின்னர் நாட்டை ஒன்றிணைத்தமை.

(C) இந்தியா, தென்கிழக்காசியா ஆகிய நாடுகளின் அரசர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்து நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியமை.

(D) புனித தந்த தாதுவின் பாதுகாப்புக்காக சுதேச படையணியை பயன்படுத்தியமை. (......)

**28.** போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் இடையிலான தொடர்பு பற்றிய பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) குவரோஸ் பாதிரியார் யாழ்ப்பாணத்தில் குடியேறி அப்பிரதேசத்தில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு நியமிக்கப்பட்டார்.

(B) ஆட்சி உபாயமாக போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் இந்து சமயத்துக்கு ஆதரவளித்தனர்.

(C) யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னன் இரண்டாம் சங்கிலியன் ஆவான்.

(D) 1619 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றக் கூடியதாயிருந்தது. (......)

**29.** ஸ்ரீமத் டி. பி. ஜயதிலக தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) அவர் புகழ்பெற்ற அறிஞராக கருதப்பட்டார்.

(B) கண்டி தர்மராஜ கல்லூரியின் அதிபராகக் கடமைபுரிந்தார்.

(C) அரசுக் கழக சபையின் தலைவராக இருந்தார்.

(D) இவர் இலங்கையின் உயர்ஸ்தானிகராகப் புதுடில்லியில் கடமை ஆற்றினார். (......)

**30.** டொனமூர் அரசியல் அமைப்பு தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது / எவை சரியானது / சரியானவை?

(A) அமைச்சரவை முறையை அறிமுகஞ் செய்தல்.

(B) நீதிச் சேவை ஆணைக்குழுவை நியமித்தல்.

(C) சர்வசன வாக்குரிமையை வழங்குதல்.

(D) அரசுக் கழக சபையை தாபித்தல். (......)

● **31** தொடக்கம் **35** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

**31.** மகிந்த தேரரின் வருகை பற்றி உறுதிப்படுத்தும் கல்வெட்டு எது?

(1) திம்பிரிவேவ கல்வெட்டு (2) வெஸ்ஸகிரி கல்வெட்டு

(3) விகாரகல கல்வெட்டு (4) ரஜகல கல்வெட்டு

(5) பாலுமெக்கச்சாவ கல்வெட்டு (......)

**32.** ஸ்ரீ சங்க போதியின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் நூல் எது?

(1) ஹத்தவனகல்ல விகாரவம்ச (2) போதி வம்ச

(3) தூப வம்ச (4) போதிவம்சத்தகதா

(5) யாப்பகு விஸ்தரய (......)

**33.** சப்புமல் குமார இளவரசன் கோட்டை மன்னனான பின்னர் எப்பெயரினால் அழைக்கப்பட்டான்?
(1) நான்காம் புவனேகபாகு (2) ஐந்தாம் புவனேகபாகு
(3) ஆறாம் புவனேகபாகு (4) இரண்டாம் ஜயபாகு
(5) மூன்றாம் பராக்கிரமபாகு (......)

0

**34.** கன்னொருவைப் போரில் மரணமடைந்த போர்த்துக்கேய தளபதி யார்?
(1) ஜெரனிமோ டி அஸிவிடோ
(2) தியாகோடி மெல்லோதி கஸ்ரோ
(3) கொன்ஸ்தாந்தினோ தி சா நொறொன்ஹா
(4) பெட்ரோ லோப்பஸ் தி சூசா
(5) பிலிப்போ தி ஒலிவேரா (......)

**35.** மகாவம்சத்தை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் யார்?
(1) ஜோர்ஜ் டேர்ணர் (2) வில்ஹெல்ம் கைகர்
(3) எச். சி. பி. பெல் (4) எச். டபிள்யு. கொட்ரிங்ரன்
(5) றொபெர்ட் பேர்சிவல் (......)

- **36** தொடக்கம் **40** வரையிலுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் விதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் தரப்பட்டுள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும். **1, 2, 3, 4, 5** என்பவற்றில் மிகவும் பொருத்தமானதைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1 | சரியானது | பிழையானது |
| 2 | சரியானது | சரியானது |
| 3 | பிழையானது | பிழையானது |
| 4 | பிழையானது | சரியானது |
| 5 | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று | |
|---|---|---|---|
| 36. | வசப மன்னனின் பின்னர் வங்கநாசிக திஸ்ஸ அரசன் ஆகினான் என்று வம்சக் கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. | தம்மணாவை, ஹபிசா கல்வெட்டுகளினால் உத்தர, துடக என்ற வசபனின் புத்திரர்கள் மன்னன் ஆகினார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது. | (..........) |
| 37. | பொலன்னறுவைக் காலத்தில் வேளைக்காரர்கள் மிகவும் பலம் வாய்ந்த நிலைமையில் இருந்தனர். | வர்த்தகக் குழுக்களின் தொடர்புடைய தென் இந்திய படையணியைச் சேர்ந்த வேளைக்காரர்களின் உதவியைப் பெறுவதற்கு பொலன்னறுவையில் இருந்த ஆட்சியாளர்கள் எப்போதும் முயற்சி செய்ததுடன் அரசுரிமையின் குறியீடான புனித தந்ததாதுவைப் பாதுகாக்கும் கடமையையும் அக்காலத்தில் அவர்களிடம் ஒப்படைத்திருந்தனர். | (..........) |
| 38. | தம்பதெனிய காலத்தில் தெடிகமவில் வேறான நிர்வாக மையம் ஒன்று இருந்தது | தெடிகம பராக்கிரமபாகு என்று ஐந்தாம் பராக்கிரமபாகு மன்னன் அழைக்கப்பட்டான். | (..........) |
| 39. | 1848 மக்கள் எழுச்சி அடக்கப்பட்ட பின்னர் டிங்கிரால மொரீசியஸ் தீவுக்கு நாடுகடத்தப்பட்டார். | 1848 போராட்டமானது எகலபொலை நிலாமை தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. | (..........) |
| 40. | 1977 பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி மாபெரும் வெற்றி ஈட்டியது. | 1977 பாராளுமன்றத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்ற ஜே. ஆர். ஜெயவர்தனா அரசியல் யாப்பினை மாற்றி முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆகினார். | (..........) |

# ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப்பரீட்சை - 2022 (2023)

| විෂයය අංකය<br>பாட இலக்கம | 25 | විෂයය<br>பாடம் | இலங்கை வரலாறு |
|---|---|---|---|

### ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்
### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. | ප්‍රශ්න අංකය<br>வினா இல. | පිළිතුරු අංකය<br>விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 04 | 11. | 04 | 21. | 05 | 31. | 04 |
| 02. | 01 | 12. | 01 | 22. | 03 | 32. | 01 |
| 03. | 01 | 13. | 05 | 23. | 05 | 33. | 03 |
| 04. | 03 | 14. | 03 | 24. | 04 | 34. | 02 |
| 05. | 02 | 15. | 03 | 25. | 03 | 35. | 01 |
| 06. | 04 | 16. | 01 | 26. | 05 | 36. | 02 |
| 07. | 05 | 17. | 04 | 27. | 03 | 37. | 05 |
| 08. | 03 | 18. | 02 | 28. | 04 | 38. | 04 |
| 09. | 04 | 19. | 05 | 29. | 05 | 39. | 03 |
| 10. | 03 | 20. | 03 | 30. | 04 | 40 | 04 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு ලකුණු 01 බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 01 × 40 = 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

ශ්‍රී ලංකා ඉතිහාසය I (II කොටස)
இலங்கை வரலாறு I (பகுதி II)
History of Sri Lanka I (Part II)

25 T I

## இலங்கை வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி. 1978 வரை

அறிவுறுத்தல்கள் :

- ❋ நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
- ❋ பகுதி II ஆனது **A, B, C** ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது.
- ❋ பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
- ❋ பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து, மேலும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு இலங்கையின் புறவுருவப்படம் பகுதி I உடன் வழங்கப்பட்டுள்ளது.)

### பகுதி A

**1.** உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) ஜம்புகோளப்பட்டினம் | (ii) மகாதித்த | (iii) யாப்பகுவா |
| (iv) பராக்கிரம சமுத்திரம் | (v) கோகர்ண | (vi) மட்டக்களப்பு |
| (vii) கண்டி | (viii) காலி | (ix) வளவகங்கை |
| (x) கிழக்கு மாகாணம் | (xi) யான் ஓயா | (xii) மல்வான |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

### பகுதி B

**2.** அனுராதபுரக் காலத்தின் வரலாற்றைக் கற்பதற்கு கல்வெட்டு மூலாதாரங்கள் உதவும் முறையினை கீழே குறிப்பிடப்படும் தலைப்புக்களில் பரிசீலிக்குக.

(i) வம்சக் கதைகளில் இடம்பெறும் விடயங்களை உறுதிப்படுத்துதல்
(ii) வம்சக் கதைகளில் இடம்பெறும் தவறான விடயங்களைச் சரியாக்குதல்
(iii) வம்சக் கதைகளில் குறிப்பிடப்படாத புதிய தகவல்களை வெளிப்படுத்துதல் (16 புள்ளிகள்)

**3.** "தேவநம்பியதீச மன்னன் ஆட்சிக் காலம் அரசியல், சமயம் ஆகிய துறைகளின் முக்கிய கட்டங்களைக் கொண்டுள்ளது."

(i) தேவநம்பியதீச மன்னனின் தகப்பன் பெயர் யாது? (01 புள்ளி)
(ii) தேவநம்பியதீசனின் இராச்சியத்தின் தலைநகரத்தின் பெயர் குறிப்பிடுக. (01 புள்ளி)
(iii) தேவநம்பியதீச மன்னன் காலத்திற்கு முன்னர் நிலவிய சமய நம்பிக்கைகள் பற்றி சுருக்கக் குறிப்பு எழுதுக. (03 புள்ளிகள்)
(iv) தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தில் அரசியல், சமயம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி ஆராய்க. (11 புள்ளிகள்)

**4.** பொலன்னறுவைக் காலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிக் கீழே குறிப்பிடப்படும் தலைப்புக்களில் விமர்சன ரீதியிலான பகுப்பாய்வு செய்க.

(i) நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயம்.

(ii) உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம்.

(16 புள்ளிகள்)

**5.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) சீகிரியா

(ii) மகாசேன மன்னனின் சாதனைகள்

(iii) யாழ்ப்பாண இராச்சியம்

(iv) கோட்டைக் காலத்தில் கல்வியும் இலக்கியமும்

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

**6.** (i) கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விளக்குக.

(ii) அந்த முயற்சிகள் தோல்வியடைந்தமைக்குக் காரணமாக அமைந்த விடயங்களைப் பரிசீலிக்குக.

(16 புள்ளிகள்)

**7.** "கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் இலங்கையில் அரசியல், நிர்வாகம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் நீண்ட கால மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தியது."

(i) கோல்புறூக் அவர்கள் வருகைதந்தபோது இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆளுநரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) அக்காலத்தில் நிலவிய நீதிமன்ற முறை பற்றிய விடயங்களைத் தேடி ஆராய்ந்த ஆணையாளரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(iii) கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவை நியமிப்பதற்குக் காரணமான விடயங்களைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)

(iv) கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் விளைவாக அரசியல் யாப்பு, நிர்வாகம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

**8.** 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்பட்ட தேசிய சமய மறுமலர்ச்சி இயக்கம் பற்றி பின்வரும் தலைப்புகளின் கீழே ஆராய்க.

(i) சமய மறுமலர்ச்சி இயக்கம் எழுச்சி பெறுவதற்குக் காரணமான பின்னணி. (08 புள்ளிகள்)

(ii) சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய செயற்பாடுகள் (08 புள்ளிகள்)

**9.** பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

(i) ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கை

(ii) 1818 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்

(iii) சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க

(iv) 1978 அரசியல் யாப்பின் அடிப்படை அம்சங்கள்


(08 × 2 = 16 புள்ளிகள்)

***

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2022 (2023)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2022 (2023)
General Certificate of Education (Adv. Level) Examination, 2022 (2023)

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රී ලංකා ඉතිහාසය<br>இலங்கை வரலாறு<br>History of Sri Lanka | I<br>I<br>I | 25 | T |



# இலங்கை வரலாறு
## இந்திய வரலாறு - ஆதிகாலம் முதல் கி.பி.1206 வரை

**அறிவுறுத்தல்கள் :**

- முதலாம் வினா கட்டாயமானது. முதலாம் வினாவுக்கும், ஏனைய B,C பகுதிகளிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவு செய்து மேலும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்குக.
(மொத்தம் நான்கு வினாக்கள்)

### பகுதி – A

(01) உமக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப் பெயரிடுக.**

| | | |
|---|---|---|
| (i) ஜம்புகோளப்பட்டினம் | (ii) மகாத்தித்த | (iii) யாப்பகுவா |
| (iv) பராக்கிரம சமுத்திரம் | (v) கோகர்ண | (vi) மட்டக்களப்பு |
| (vii) கண்டி | (viii) காலி | (ix) வளவகங்கை |
| (x) கிழக்கு மாகாணம் | (xi) யான் ஓயா | (xii) மல்வான |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு 01 புள்ளி வீதம்)

### பகுதி – B

(02) அனுதாரபுரக் காலத்தின் வரலாற்றைக் கற்பதற்கு கல்வெட்டு மூலாதாரங்கள் உதவும் முறையினை கீழே குறிப்பிடப்படும் தலைப்புகளில் பரிசீலிக்குக

i. வம்சக் கதைகளில் இடம்பெறும் விடயங்களை உறுதிப்படுத்துதல்
ii. வம்சக் கதைகளில் இடம்பெறும் தவறான விடயங்களைச் சரியாக்குதல்
iii. வம்சக் கதைகளில் குறிப்பிடப்படாத புதிய தகவலக்களை வெளிப்படுத்தல்

(16 புள்ளிகள்)

**i. வம்சக் கதைகளில் இடம்பெறும் விடயங்களை உறுதிப்படுத்துதல்**

- வம்ச கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெரும்பாலன ஆட்சியாளர்களின் வரலாற்றினை அறியமுடியும் (தேவநம்பிய திஸ்ஸ – மிகிந்தலை கல்வெட்டு, உத்திய – மிகிந்தலை கல்வெட்டு, பெரியபுளியங்குளம் கல்வெட்டு / வலகம்பா – கொரவக்கல கல்வெட்டு / துட்டகைமுனு – மிகிந்தலை மற்றும் சிதுல்பவ்வ கல்வெட்டு / மகாசேனன், ஸ்ரீமேகவர்னன்- தோணிகல கல்வெட்டு)
- மகிந்ததேரரின் வருகையை உறுதிப்படுத்துவது (அம்பாறை ரஜகல கல்வெட்டு மற்றும் மிகிந்தலை கல்வெட்டு)
- பத்து தளபதிகளின் வரலாற்றை உறுதிப்படுத்துவது (நந்திமித்திர – கொரவகல மற்றும் சிதுல்பவ்வ கல்வெட்டு / புஸ்ஸதேவ – சிதுல்பவ்வ மற்றும் வெல்லெல்லுகொடகந்த கல்வெட்டு / வேலுசுமன – சிதுல்பவ்வ கல்வெட்டு)
- கதிர்காமம் தசபதிக மன்னன் பற்றி தகவலை அறியகூடியது. (போவத்தேகல மற்றும் கொட்டதமுஹெல கல்வெட்டு)

- ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்த அதிகரிகள் பற்றி அறிந்துக்கொள்ளகூடியது அமைச்சர் – கதுறுவெவ மற்றும் ரிட்டிகல கல்வெட்டு / சேனாதிபதி – சிதுல்பவ்வ / பொருளாளர் – கொரவக்கல கல்வெட்டு / நகரகுத்திக – தோரமய்லேவ கல்வெட்டு)
- மேலும் வம்ச கதைகயில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல், நிர்வாகம், பொருளாதார தகவல்கள், சமூக மற்றும் கலாச்சார தகவல்கள் பலவற்றை கல்வெட்டுக்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### ii. வம்சக் கதைகளில் இடம்பெறும் தவறான விடயங்களைச் சரியாக்குதல்

- மகாவம்சத்தினபடி லம்பகர்ண வம்சம் வசப மன்னனுடன் தோற்றம் பெற்று துங்சனாக மன்னனுடன் நிறைவடைந்தது. இந்த வம்சம் மகாநாக மன்னன் காலம் வரை நிலவியதாக வெஸ்கிரிய மற்றும் திம்பிரிவெவ கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- கீர்த்தி ஸ்ரீ மேகவர்ன மன்னனுடைய காலத்தில் சரியாக அறிந்துக்கொள்ள முடிவது (டெம்கொட விகாரை கல்வெட்டு)
- இந் நாட்டின் அரச வளர்ச்சி இந்திய அடிப்படையுடன் தொடர்புபட்டிருந்தாதக இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டுக்களின் அடிப்படையில் அவை இந்நாட்டு மரபின்படி வளர்ச்சியடைந்தாதக குறிப்பிடப்பட்டுள்ளது. (காமினி, பருமக, மபுறுமுக, ராஜா, மகாராஜா)
- அரச மரபுரிமை பற்றி சரியான விடயங்களை பெற்றுக்கொள்ள முடியும். (மோலஹிடடியவெலேகல மற்றும் மஹரத்மலே கல்வெட்டுக்களில்)
- சமய நிகழ்வுகள் பற்றி அறிவதற்கு ( ஆரியவம்சம், - தோணிகல கல்வெட்டு)
- இந்நாட்டிற்கு வருகை தந்த பல்வேறு ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. (புத்தபரிந்த – றுவன்வெலிசாய கல்வெட்டு / திரிதர – கதிர்காம கல்வெட்டு)

### iii. வம்சக் கதைகளில் குறிப்பிடப்படாத புதிய தகவல்களை வெளிப்படுத்துதல்

- இலங்கையின் பொருளாதார வரலாற்றில் வர்த்தகம் முக்கிய அம்சமாக காணப்பட்டதாக தகவல் கிடைத்துள்ளது. (கொடவாய கல்வெட்டு – துறைமுகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரி தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது / பதுளை தூண் கல்வெட்டில் - வர்த்தக சந்தையின் நிர்வாகம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது / பெரியபுளியங்குளம் மற்றும் திரிதர கல்வெட்டில்- வர்த்தக தரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.)
- இலங்கையில் மேற்கொள்ளப்பட் ஏனைய தொழில்கள் பற்றி கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கோன்கல கல்வெட்டு / மணிகர / வெஸ்கிரி மற்றும் பஹதமுல்ல கல்வெட்டு – குயவர்களை பற்றியது)
- நீதிமன்றம் தொடர்பாக தெளிவான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளது. (சிதுல்பவ்வ கல்வெட்டு – நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத்தை சிதுல்பவ்வ விகாரைக்கு தானமாக வழங்குதல் / வெவேல்கெட்டிய கல்வெட்டு கிராமத்தில் வழங்கப்படும் சாதாரணமான தீர்ப்புகள் மற்றும் சட்டத்திட்டங்கள்)
- ஆட்சியாளர்களின் ஆதிக்கம் பரவியிருந்த பிரதேசங்கள் தொடர்பான ஆதாரங்கள் கிடைக்பெற்றுள்ளது ( வசப மன்னனின் அதிகாரம் இலங்கை முழுவதும் பரவி காணப்பட்டது – வல்லிபுர பொற்சாசனம், காசிமேடை மற்றும் திஸ்ஸமாராம கல்வெட்டு)
- ஆட்சி முறை தொடர்பாக அறியகூடியது. (வசபனுக்கு இரு மகன்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது – உதர: ஹெப்பேஸ்ஸ கல்வெட்டு, துடக: தம்மென்னா கல்வெட்டு)
- அரச பரம்பரை ஐந்தை பற்றி அறிந்துக்கொள்ள முடிவது (கதுறுவெல கல்வெட்டு)
- பிராந்திய ஆட்சி பிரிவுகள் பற்றி அறிந்துக்கொள்ள கூடியது ( யடஹலென, லெனகல, பம்பரகல, எம்புல்அம்பே, குசலாந்கந்த மற்றும் சிதுல்பவ்வ போன்ற கல்வெட்டுக்கள்)
- திஸ்ஸ மன்னன் பயன்படுத்திய தேவநம்பிய எனும் நாமம் பிற்காலத்தில் அரசனின் புனைபெயராக பயன்படுத்தியதை பற்றி அறிந்துக்கொள்ள முடிந்தது. ( உத்திய மன்னன் - மிகிந்தலை கல்வெட்டு)

**(16 புள்ளிகள்)**

**(3) "தேவநம்பியதீச மன்னன் ஆட்சிக் காலம் அரசியல், சமயம் ஆகிய துறைகளின் முக்கிய கட்டங்களைக் கொண்டுள்ளது."**

i. தேவநம்பியதீச மன்னனின் தகப்பன் பெயர் யாது? **(01 புள்ளி)**

ii. தேவநம்பியதீசனின் இராச்சியத்தின் தலைநகரத்தின் பெயர் குறிப்பிடுக. **(01 புள்ளி)**

iii. தேவநம்பியதீச மன்னன் காலத்தில் முன்னர் நிலவிய சமய நம்பிக்கைகள் பற்றி சுருக்கக் குறிப்பு எழுதுக **(03 புள்ளிகள்)**

iv. தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தின் அரசியல், சமயம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி ஆராய்க. **(11 புள்ளிகள்)**

**i. தேவநம்பியதீச மன்னனின் தகப்பன் பெயர் யாது?**

முத்தசிவன் **(01 புள்ளி)**

**ii. தேவநம்பியதீசனின் இராச்சியத்தின் தலைநகரத்தின் பெயர் குறிப்பிடுக**

அநுராதபுரம் **(01 புள்ளி)**

**iii. தேவநம்பியதீச மன்னன் காலத்திற்கு முன்னர் நிலவிய சமய நம்பிக்கைகள் பற்றி சுருக்கக் குறிப்பு எழுதுக**

- ➢ சைவ, ஜைனம், பரிராஜிக, அஜிவக, பாஷாண்ட, தாபச போன்ற சமய மரபுரிமைகள் காணப்பட்டது.
- ➢ இயக்கர் வழிப்பாடு, நாக வழிபாடு, தேவ வழிப்பாடு, விருட்ச வழிபாடு, நட்சத்திர வழிபாடு, இறந்தோரை வழிபடுதல் போன்றனவும் காணப்பட்டது.
- ➢ இயற்கை பொருட்களை தெய்வமாக கருதி வழிபட்டமை (சந்திரன், சூரியன், அக்கினி, வருணன், பர்ஜன், மேக, விஜ்ஜு)
- ➢ பெரும்பாலும் பௌத்த சமயம் (மகிந்த தேரர் வருவதற்கு முன்னர் புத்தர் இரு முறை இலங்கைக்கு வந்ததாக வம்ச கதைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது)
- ➢ அத்தோடு இங்கு காணப்பட்ட எந்தவொரு மதமும் அரச மதமாக காணப்படவில்லை. சிறு குழுக்கள் மத்தியில் இந்த சமய நம்பிக்கைகள் நிலவியதாக அறியமுடியும். (03 புள்ளிகள்)

vi. **தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்தில் அரசியல், சமயம் ஆகிய துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி ஆராய்க.**

<u>அரசியல்</u>

- ➢ இந்நாட்டில் மௌரிய முடிசூட்டு முறை ஸ்தாபித்தமையினால் இந்நாட்டில் அரசாட்சி முறை வளர்ச்சியடைந்தது.
- ➢ இந் நாட்டு ஆட்சியாளர்களால் தேவநம்பிய எனும் பட்டபெயர் பயன்படுத்தப்பட்டது.
- ➢ மௌரிய ஆட்சி முறையினால் புதிய பதவி பெயர்களும் பயன்படுத்தப்பட்டது
- ➢ (சேனாதிபதி, புரோகிதர், தண்டநாயக, பாண்டாகரிக – பொருளாளர்) பௌத்த மதம் அரச மதமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

<u>சமயம்</u>

- ➢ இலங்கைக்கு மகிந்ததேரர் உள்ளிட்ட தூதுக்குழுக்களின் வருகையோடு பிக்கு சாசனம் மற்றும் பௌத்த சாசனமும் தோற்றுவிக்கப்பட்டது.
- ➢ பௌத்த மதம் அரச மதமாக பிரகடனப்படுத்தப்பட்டது
- ➢ தந்ததாதுவை கொண்டுவந்து தூபிகளை நிர்மாணித்தனர்.
- ➢ புனித வெள்ளரச மரக்கிளை கொண்டுவரப்பட்டது.
- ➢ சங்கமித்தை பிக்குனியின் வருகையோடு பிக்குனி சாசனம் தோற்றுவிக்கப்பட்டது.
- ➢ மொழி மற்றும் கல்வி வளர்ச்சியடைந்தது.
- ➢ கலை, இலக்கியம் மற்றும் கட்டிட கலை வளர்ச்சியடைந்தது.
- ➢ பௌத்த மதத்தை அடிப்படையாக கொண்டு பல்வேறு விழாக்கள் முன்னெடுக்கப்பட்டது.

- பௌத்த மத்தை அடிப்படையாக கொண்டு புதிய ஒழுக்க பண்பாடுகள் உருவாகியது.

**(11 புள்ளிகள்)**

**(04) பொலன்னறுவைக் காலத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பற்றிக் கீழே குறிப்பிடப்படும் தலைப்புகளில் விமர்சன ரீதியிலான பகுப்பாய்வு செய்க.**

i. நீர்பாசனத்தை அடிப்படையாகக் கொண்ட விவசாயம்.
ii. உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம்.

**(16 புள்ளிகள்)**

**iv. நீர்பாசனத்தை அடைப்படையாகக் கொண்ட விவசாயம்**

- முதலாம் விஜயபாகு மன்னன் (1070-1110) புதுகுண வாவியை நிர்மாணித்ததோடு பெரிய குளங்கள் மற்றும் கால்வாய்கள் புனர்நிர்மாணம் செய்து விவசாய வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்துள்ளார்.

  மஹாஹெலி (மாலுஹெலி), பத்தபாசன (நாச்சத்துவ), காணவாப (மகாகனதார), மஹாதாரகல்ல (மஹகல்கடவல) மின்னேரியா வாவி போன்றன அவற்றில் சிலவாகும்.

- மின்னேரியா குளத்திற்கு நீரை கொண்டு செல்லும் எலஹர கால்வாய் (தலவது கால்வாய்) புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.
- முதலாம் பராக்கிரமபாகு (1153 – 1186) நீர்பாசன குளங்களை அமைத்து மற்றும் புனர்நிர்மாணம் செய்து விவசாய வளர்ச்சிக்கு பெரும் சேவையாற்றியுள்ளார். “வானத்தில் இருந்து விழு ஒரு துளி நீரைரேனும் பயன்படுத்தாது கடலில் சேரவிடக்கூடாது” என திடசங்காப்பம் கொண்டு செயற்பட்டார். “மாணிக்கம், தங்கம் போன்றன பூமியில் விளையும் மற்றைய இடம் வயலில் இல்லாது வேரேங்கும் விளையும் இடமேதும் உண்டா” என்றும் குறிப்பிட்டுள்ளார்.
- இம் மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் நீர்பாசனம் உயர் அளவில் இடம் பெற்ற சந்தர்ப்பமாகும். பாரிய அளவிலான நீர்பாசனவியல் மேற்கொண்டதால் பாரியளவு நிலங்களில் விவாசயம் மேற்கொள்ளப்பட்டது.
- தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக இருந்த போது தெதுறு ஓயாவுக்கு குறுக்காக கொட்டபத்த, சூகாரநிஜ்ஜர, தொரதத்திக போன்ற மூன்று அணைகளை கட்டினான். அந்த பிரதேசத்தில் விவசாயத்திற்காக நீரை பெற்றுக்கொடுத்தல், பஞ்ச யோசனை திட்டங்கள் செயற்படுத்துதல், பண்டாவாவியை விரிவாக்குதல், தக்கிண தேசத்தில் 53 வாவிகளை புனர்நிர்மாணம் செய்தமை குறிப்பிடதக்கது. (மகால்ல வாவி, சிடுவாவி, தம்பவாவி, வசாவாவி, கிரிபாவாவி, படாலவாவி)
- முழு நாட்டிற்கும் அரசனாகிய பின்னர் நீர்பாசனம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தினார்.
- பராக்கிரம சமுத்திரத்தை நிர்மாணித்தமை (தோப்பாவாவி, தும்புலுவாவி, ஏரமுதுவாவி போன்றவற்றை ஒன்றினைத்து)
- பராக்கிரதடாகம், மிஹிதுதலா, ஏகாஹவாபி, பராக்கிரம சமூத்திரத்தை நிர்மாணித்தான்.
- பராக்கிரம சமூத்திரத்தில் இருந்து விவசாய நிலங்களுக்கு நீரை கொண்டு செல்வதற்கு 11 கால்வாய்களை நிர்மாணித்தார். (கம்ஹீர, ஹேமவதி, நீலவாஹினி, சசலவனீ, சரகு, நர்மதா, யமுனா, சரஸ்வதி, தாமரபரணி)
- கால்வாய்களை அபிவிருத்தி செய்தார். (அங்கமெடில், ஹத்தோட்ட, காலிங்க, கோமதி)
- பல குளங்களை புனர்நிர்மாணம் செய்தார். (காலவாவி, மின்னேரியாவாவி, கவுடுள்ள, கிரிதலை, கந்தளாய், நாச்சத்துவ, மகாகாகனதர, பதவிய, யோதவாவி)
- வம்ச கதைகளில் குறிப்பிட்டுள்ளவாறு இம் மன்னன் 163 பெரிய குளங்களையும், 2376 சிறிய குளங்களையும், 165 அணைகளையும், 3910 கால்வாய்களையும், 341 மதகுகளையும் நிர்மாணித்துள்ளார். சிதைவடைந்த 1753 குளங்களையும் புனர்நிர்மாணம் செய்தான்.

- ➢ நிஸ்சங்கமல்ல மன்னன் பராக்கிரம சமுத்திரத்தின் அணைக்கட்டினை புனர்நிர்மாணம் செய்தான்.
- ➢ கல்யாணிவதி அரசி பதலகொட வாவியை புனர்நிர்மாணம் செய்தார்.

(நீர்பாசன வளர்ச்சியினை தெளிவுப்படுத்தி அது எவ்வாறு விவசாய வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியது என்பதை கலந்துரையாடி விடையளிக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.)

**v. உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம்**

**உள்நாட்டு வர்த்தகம்**

- ➢ வாசனை திரவியங்கள், உப்பு, துணி வகைகள், ஆபரணங்கள், நறுமண பொருட்கள் போன்றன வர்த்தக சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டது. நிகம (நியங்கம்) எனும் வர்த்தக நகரம் காணப்பட்டது.
- ➢ முதலாம் விஜயபாகுவிற்கு எதிராக கிளர்ச்சி செய்த அதிகாரிகளில் செட்டிநாத எனும் வர்த்தக தலைவர் ஒருவனும் காணப்பட்டார்.
- ➢ முதலாம் பராக்கிரமபாகு உள்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்காக அந்தரங்கதூர எனும் திணைக்களத்தை உருவாக்கினார்.
- ➢ வர்த்தக குழு தலைவர்கள் காணப்பட்டனர் ( சிடுனா, கடகோஷ்டியோ எத்தவுன்)
- ➢ வண்டிகளில் பொருட்களை ஏற்றி சென்ற வர்த்தக குழு நாட்டின் எல்லா பகுதிகளிலும் வர்த்தக நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். (தவளம் முறையினை பயன்படுத்தி பொருட்களை பரிமாறிக்கொள்ளுதல்)
- ➢ தலையில், தோளில் பொருட்களை சுமந்து ஒவ்வொரு இடங்களுக்கும் நடந்து சென்று வர்த்தகத்தில் ஈடுப்பட்டனர்.
- ➢ வளையல்கள், மோதிரம் போன்ற ஆப்ரணங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களும் காணப்பட்டனர்.
- ➢ நாணயங்களையம் பயன்படுத்தியுள்ளனர் (முதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு மற்றும் லீலாவதி அரசி)

**வெளிநாட்டு வர்த்தகம்**

- ➢ பர்மா ( ரமஞ்சதேசம்), இந்தியா, அரேபியா, சீனா போன்ற நாடுகளுடன் வர்த்தக தொடர்புகளை பேணிவந்துள்ளனர். முதலாம் பராக்கிரமபாகு மன்னன் பர்மாவை ஆக்கிரமித்தமை (வர்த்தக தொடர்பு நிலவியமைக்கான சான்று / அந்த தொடர்பு பாதிப்படைந்தமை)
- ➢ தென்னிந்திய வர்த்தகர்கள் சிலர் இந்நாட்டில் இருந்து வர்த்தகத்தில் ஈடுப்பட்டுள்ளனர். (நானாதேசிக, வலஞ்சியர், வீரவலஞ்சியர், நகரத்தார்) போன்றோர்களுக்கு என வர்த்தக நகரங்களும் காணப்பட்டன. (வாஹல்கட, பதவிய, பொலன்னறுவை)
- ➢ முதலாம் பராக்கிரமபாகு மன்னனுடைய நயினாதீவு தமிழ் கல்வெட்டில் ஊராதோட்டைக்கு வர்த்தக கப்பல்கள் வந்தது பற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது)
- ➢ வர்த்தக துறைமுகங்கள் காணப்பட்டது (ஊராதோட்டை, ஹம்பாந்தோட்டை, ஊராத்தோட்டை, வெலிகம, உருவெல)
- ➢ ஏற்றுமதி பொருட்கள் - முத்து, மாணிக்கம், யானைகள்
- ➢ இறக்குமதி பொருட்கள் - கற்பூரம், சந்தணம், துணி வகைகள், குதிரை (சீனா, காஸ்மீர், பனாரஸ் நகரம்)

**(16 புள்ளிகள்)**

**(05). பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கித்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.**

- **i.** சீகிரியா
- **ii.** மகாசேன மன்னனின் சாதனைகள்
- **iii.** யாழ்ப்பாண இராச்சியம்
- **iv.** கோட்டை காலத்தில் கல்வியும் இலக்கியமும்

**(08 x 2 = 16 புள்ளிகள்)**

**i. சீகிரியா**

- மத்திய மகாணத்தில் தம்புளைக்கு அண்மையில் மாத்தளை மவட்டத்தில் அமைந்துள்ளது.
- இந் நாட்டின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து குடியேற்றங்கள் சீகிரியாவுக்கு அண்மையில் உள்ள பிரதேசங்களில் காணப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன.
- பிராமி கல்வெட்டு – புராதான காலம் தொடக்கம் சீகிரியாவை சூழவுள்ள பெரும்பாலான குகைகளில் பௌத்த பிக்குகள் வழ்ந்துள்ளனர்.
- மகாவம்சம் - முகலனுடைய தாக்குதலுக்கு பயந்து காசியப்ப மன்னன் சிகீரியாவை நிர்மானித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.
- சீகிரியாவை நான்கு பிரிவாக பிரிந்து நோக்கலாம்: 1).மாளிகை பூங்கா 2). படிவரிசை பூங்கா 3). கற்பூங்கா 4). நீர் பூங்கா போன்றன ஆகும்
- குன்றின் உச்சியில் அமைந்துள்ள மாளிகை கி.பி. 5ம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அது அரசர் மற்றும் அரச குலத்தவர்களின் இருப்பிடமாகும். பொய்கை மற்றும் பாதுகாப்பு அரண் குன்றில் மேல் காணமுடியும்.
- இந்த பூங்காக்களை குன்றுக்கு செல்லும் மத்தி வழியில் காணமுடியும். வழியின் இரு மருங்கிலும் பல்வேறு வடிவமுடைய பல்வேறு வகையையான பொய்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. அதிக வெப்பத்தை கொண்ட பகுதியான சீகிரியா பிரதேசத்தை நீரினால் குளிர்ச்சியடைய செய்வதற்காக இது போன்ற குளங்களை அமைத்ததாக நம்பப்படுகின்றது. பொய்கைகளை ஒன்றோடு ஒன்று தொடர்புபடுத்தும் வகையில் நீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குளங்களில் ஒரு சில குளங்கள் நீர் விளையாட்டுக்களுக்காக நிர்மாணிகப்பட்டுள்ளதோடு, ஒரு சில குளங்கள் வெப்பத்தை தணித்து குளிர்ச்சியை பேணுவதற்காக திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது.
- சீகிரியாவில் சுவர் ஓவியங்கள் காணப்படுவதால் அது விசித்திரதான இடமாக கருதப்படுகின்றது. குன்றின் சுவர்களில் பல ஓவியங்கள் காணப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. தற்போது குன்றின் மேற்கு பகுதியில் உள்ள 22 ஓவியங்களை மட்டும் காணமுடியும். இந்த ஓவியங்களில் காட்சியாளிக்கும் விடயங்கள் தொடர்பாக பல்வேறுப்பட்ட கருத்துக்கள் உள்ளன.

H.C.P.பெல் - பிதுரங்கல விகாரையை வழிப்பட செல்லும் அரசிகள்.

ஆனந்த குமாரசாமி – தெய்வீக மாதர்கள் அல்லது தேவகன்னியர்கள் (அப்சரா)

மார்ட்டின் விக்கிரமசிங்க – நீர் விளையாட்டில் ஈடுபடும் மங்கையர்கள்

நந்ததேவ விஜேசேகர – தனது கணவர் இறந்தமையினால் சோகத்தில் இருக்கும் அரசிகள்

செனரத் பரணவிதாரன – பொன்நிற மங்கையர்கள் விஜ்ஜுலதா மின்னலாகவும், நீல நிற மங்கையர்கள் மேகலதா எனும் முகில்களாகவும் காட்சியளிக்கின்றன.

- சீகிரியாவின் மற்றுமொரு சிறப்பம்சம் கிறுக்கல் கவிதையாகும். கி.பி 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13 நூற்றாண்டு வரை சுற்றுலா பயணிகளின் சுற்றுலா இடமாக கருதப்பட்டதாக சீகிரியா கிறுக்கல் கவிதையின் மூலம் அறியமுடியும். பரணவிதாரன அவர்களால் சீகிரியா கண்ணாடி சுவரில் இருந்து 685 கிறுக்கல் கவிதைகளை தொகுத்துள்ளார்.
- சீகிரியாவானது இந்நாட்டின் நகர நிர்மாணம், கட்டிட நிர்மாணம், நீர்ப்பாசன முறை, பூங்கா திட்டமிடல் கலை, மொழி, இலக்கியம் மற்றும் ஓவியக் கலை போன்ற பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் நிறைந்த முக்கியமான தொல்பொருள் பிரசேமாக கருதப்படுகின்றது.

**(08 புள்ளிகள்)**

### ii. மகாசேன மன்னனின் சாதனைகள்

- ➢ மத ரீதியில் பூசல் ஏற்பட்ட காலப்பகுதியில் மகாசேன மன்னன் (276-303) அநுராதபுரத்தில் ஆட்சிபீடம் ஏறினான். (மகாவிகாரை மற்றும் அபயகிரி விகாரைகளுக்கிடையில் தேரவாதம் மற்றும் மகாயான பௌத்த கொள்கைகளுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டது)
- ➢ மகாசேன மன்னன் மகாவிகாரைக்கு எதிரான கொள்கைளை முன்னெடுத்தான். அதற்காக சங்கமித்த பிக்குவை தூண்டிவிட்டமை முக்கிய காரணமாக அமைந்தது.
- ➢ இவ்வாறான ஒரு பின்னணியில் அரசனுக்கு எதிராக பொது மக்கள் கிளர்ச்சியை மேற்கொண்டமையினால் உருகுணை மற்றும் மலையரட்டை மக்களும் மன்னனுக்கு எதிராக செயற்பட்டனர்.
- ➢ மகாசேன மன்னனுடைய ஆட்சி காலத்தில் மத பூசல்கள் ஏற்பட்ட போதிலும் ஆட்சியாளன் என்ற ரீதியில் பல சாதனைகளை மேற்கொண்டுள்ளான்.

**பொருளாதாரம்**

- முதன் முறையாக பாரிய குளங்களை கட்டும் பணி இவனுடைய ஆட்சிக்காலததில் இடம்பெற்றது.
- மகாசேன மன்னன் 16 குளங்களையும் ஒரு கால்வாயையும் நிர்மாணித்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இவர் நிர்மாணித்த குளங்களில் மின்னேரியா குளம் மிக பிரசித்தமானது. 4670 ஹெக்டேயர் நிலப்பரப்பை கொண்ட இக் குளத்தில் இருந்து 4000 ஹெக்டேயர் நிலப்பிரதேசங்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டது.
- மகாசேன மன்னனால் நிர்மாணிக்கப்பட்ட திஸ்சவட்டமானகவாபி குளம் மின்னேரியா குளம் போன்று பெரியது. அது கல்வெட்டுக்களின் ரன்திஸா குளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இது தற்போது சிதைவடைந்துள்ள கவுடுலு வாவி என கொட்டிங்டன் என்பவரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குளத்திற்கு கவுடுலு ஓயாவில் இருந்து நீர் வழங்கப்படுகின்றது. அத்தோடு மின்னேரியா குளத்தில் இருந்து 3 மைல் தூரம் வெட்டப்பட்ட கால்வாய் மூலம் இதற்கு நீர் கிடைக்கப்பெறுகின்றது.
- மகாசேன மன்னன் ஹுருலு வாவி, மகாகனதரா வாவி போன்ற குளங்களையும் நிர்மாணித்துள்ளார்.
- மகாசேன மன்னனின் ஆட்சிக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட எலஹர, மின்னேரியா, கவுடுலு போன்ற நீர்பாசன திட்டம் இலங்கை நீர்பாசன வரலாற்றின் புதிய யுகத்தை தோற்றுவித்துள்ளது. இந்த நீர்பாசன திட்டத்தின் மூலம் மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளமையினால் இவ் அரசனை முற்காலத்தில் ஹத் ரஜ்ஜுரு பண்டார எனும் மின்னேரியா தெய்வம் என்று வழிப்பட்டனர்.
- இம் மன்னனுடைய ஆட்சிக்காலத்திலே உலகின் பெரிய செங்கல் நிர்மாணமான ஜேதவனராம நிர்மாணிக்கப்பட்டது.
- மகாசேன மன்னனால் மின்னேரியா, கோகண்ண, கலந்தக விகாரை உட்பட பத்து விகாரைகளும் பிக்குணிகள் தங்குவதற்கான இரண்டு ஆராமைகளையும் நிர்மாணித்துள்ளார்.
- மன்னனுடைய ஆதரவுடன் இலங்கையில் வைதுல்யவாத கருத்துக்கள் பரவியது.
- மகாசேன மன்னன் "நிறைய பாவங்களையும் நிறைய புண்ணியங்களையும் செய்துள்ளதாக" மகாவம்சத்தின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் **(08 புள்ளிகள்)**

### iii. யாழ்ப்பாண இராச்சியம்

- ➢ பொலன்னறுவை இராதசானி வீழ்ச்சியடைந்த பின்னர் கி.பி. 1215 ம் ஆண்டு யாழ்பாணம் சுயாதீன பிராந்திய ஆட்சி நிலையமாக தோற்றம் பெற்றது.
- ➢ யாழ்பாண இராசதானி பற்றி அறிய கூடிய மூலாதாரங்களாக யாழ்பாண வைபவமாலை, கைலாசமாலை, செகராசசேகரமாலை, நிகாய சங்கிரகாய இபான்பதுதா மற்றும் மார்கோபோலோ போன்றோரின் குறிப்புக்களை குறிப்பிடலாம்.
- ➢ கி.பி 14ம் நூற்றாண்டில் யாழ்பாண பிரதேசத்தை மையாமாக கொண்டு ஆரிய சக்கரவர்த்தி பரம்பரையினர் ஆட்சி செய்தனர். ஆரிய சக்கரவர்த்தி

ஆட்சியாளர்களின் முதல் ஆட்சி பிரதேசம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றது.

ராமேஸ்வரம் - செகராசசேகரமாலை

இவர்கள் சோழ அரச வம்சத்தை சார்ந்தவர்கள் - யாழ்பாணவைபவமாலை

பிராமண குலத்தை சார்ந்தவர்கள் என்றும் இவர்கள் பண்டிய நாட்டின் வெச்சாருக்டகயடநாடு என்ற பிரதேசத்தை ஆட்சி செய்தவர்களின் மரபில் இருந்து வந்தவர்கள் என்று அறியப்படுகின்றார்.

- ➢ ஆரிய சக்கரவர்த்தி பரம்பரையை சேர்ந்தவர்கள் 12 பேராவர். இதன் முதல் ஆட்சியாளன ஜயவீர சிங்கன் ஆவார்.
- ➢ 1344 இல் இலங்கைக்கு வருகைதந்த இபான் பாதுதா ஆசியசக்கரவர்த்தி ஆட்சியாளர்களை இலங்கையின் சுல்தான்கள் என்று குறிப்பிட்டுள்ளார். இவர்கள் 14ம் நூற்றாண்டில் யாழ்பாணத்தை மையமாக கொண்டு இராசதானியை அமைத்ததோடு அதன் தலைநகரம் நல்லூர் ஆகும். இவர்கள் பாண்டிய ஆட்சியாளர்களுடன் கொண்டிருந்த தொடர்பினால் பலம்வாய்ந்தவர்களாக விளங்கினர்.
- ➢ கி.பி. 1344 ம் ஆண்டளவில் யாழ்ப்பாண இராசதானியின் எல்லை மன்னார் வரை பரவியிருந்தது.
- ➢ வரியை சேகரித்துக்கொள்ளும் நோக்குடன் கி.பி.1347ம் ஆண்டளவில் ஆரிய சக்கரவர்த்தி ஆட்சியாளர்கள் இரு முறை தென் பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளதாக கருதப்படுகின்றது.

மெதவல கல்வெட்டு – ஆரிய சக்கரவர்த்தி ஆட்சியாளர்கள் இரண்டாம் விக்கிரமபாகு மன்னரின் ஆட்சி காலத்தில் கம்பளையின் சில பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை பரப்பினர். (ராஜாவலிய நூலில் இது தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது)

- ➢ இக்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்த வெல்லால ஆட்சியாளர்கள் யாழ்ப்பாண பிரதேசத்தில் குடியேறினர்.
- ➢ கி.பி. 1519 ம் ஆண்டு பரராசசேகரனை கொலை செய்து சங்கில் மன்னன் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினான். (1543 மற்றும் 1560ம்) ஆண்டு காலப்பகுதியில் போர்த்துகேயர் யாழ்ப்பாணத்தை ஆக்கிரமித்தனர்.
- ➢ கி.பி. 1566 ம் ஆண்டு சங்கிலி மன்னன் ஆட்சி அதிகாரத்தை இழந்தான்.
- ➢ கி.பி. 1570 ம் ஆண்டு யாழ்ப்பாண ஆட்சியாளனாக போர்த்துகேய இராணுவத்தினரால் நியமிக்கப்பட்ட பெரியபிள்ளை செகராசசேகரன் தண்டோரகனின் உதவியுடன் மன்னார் பிரதேசத்தில் போர்த்துகேயருக்கு எதிராக தாக்குதலை மேற்கொண்டான்.
- ➢ கி.பி. 1519ம் ஆண்டு போர்த்துகேயர் மேற்கொண்ட தாக்குதலில் யாழப்பாண இராச்சியம் போர்த்துகேயரின் பாதுகாப்பு பிரதேசமாகியது.
- ➢ கி.பி. 1619 ம் ஆண்டு யாழ்பாணம் போர்த்துகேயர்களின் ஆட்சியின்கீழ் கொண்டுவரப்பட்டதோடு யாழ்ப்பாண இராச்சியம் முற்றுப்பெற்றது.

**(08 புள்ளிகள்)**

## iv. கோட்டை காலத்தின் கல்வியும் இலக்கியமும்

**கல்வி**

- ➢ அரசியல் உறுதிப்பாடு, சிறந்த பொருளாதாரம் மற்றும் கல்விக்கு கிடைத்த அரச அனுசரணையினால் கோட்டை காலத்தில் கல்வி நிலை சிறந்து விளங்கியது.
- ➢ கல்வியின் மத்திய நிலையமாக பிரிவேனாக்கள் விளங்கியது. வத்தளை வனவாச, காரகல பத்மாவதி பிரிவேனா, தொடகமுவ விஜயபாகு, விதாகம ஸ்ரீ கணாநந்த, தெவிநுவர இருகல்குலதில்க்க செனவிரத், ஏரபத்தொட தர்மராஜ, உஸ்சாப்பிட்டிய மஹாபய, பெபிலியான சுனேத்ராதேவி, பெந்தோட்ட கலபாத விகாரை போன்றன சிறந்த பிரிவேனாக்களாக விளங்கியதோடு துறவிகள் மற்றும் துறவிகள் அல்லாதோருக்கும் கல்வியை வழங்கியது.

- தொடகமுவ ஸ்ரீ ராகுல தேரர், விதாகம மைத்திரி தேரர், வெத்தேவ தேரர், தம்மாதின்ன விமலகீர்த்தி தேரர், வில்கம்முல தேரர், பெபிலியானே தேரர் போன்ற சிறந்த பிக்குகள் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்துள்ளனர்.
- சிங்களம், பிராக்கிருதம், தமிழ் போன்ற மொழிகள், கவிதை, நாடகம், சோதிடம், லௌகீகம் போன்றன பிரிவேனாக்களில் கற்பிக்கப்பட்டது. பிரதான பாடமாக திரிபீடகம், பௌத்த தர்மம் கற்பிக்கப்பட்டது. வைத்தியர்கள் மற்றும் ஆசிரியர்களை உருவாக்குவதற்கு தேவையான கல்வி பிரிவேனாக்களில் வழங்கப்பட்டது.

**இலக்கியம்**

- கோட்டை காலம் இந்நாட்டின் இலக்கிய வரலாற்றின் மிக முக்கியமான காலப்பகுதியாகும். 6ம் பராக்கிரமபாகு மன்னனுடைய ஆட்சிக்காலத்தில் இலக்கியம் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்து.

6ம் பராக்கிரமபாகு மன்னனும் இலக்கியங்களை எழுதியுள்ளான்

(வைத்தியசின்தாமணி, ஹேசஜயசங்கிரய, யோகரத்னாகர)

- காரகல பத்மாவதி பிரிவேனவின் வனரதன தேரர், தொடகமுவ விஜயபாகு பிரிவேனாவின் ஸ்ரீ ராகுல தேரர், றைகம ஸ்ரீ கணானந்த பிரிவேனாவின் மஹனெத்பாமுல மைத்திரி தேரர் போன்றோர் இலக்கியங்களை படைத்துள்ளமை பற்றி தகவல் கிடைத்துள்ளது.

தொடகமுவ ஸ்ரீ ராகுல தேரர் சிறந்த பண்டிதர் – பரவிசந்தேசிய, செலஹினி சந்தேசிய, காவியசெகர, பஞ்சிகாபிரதீபய, பதாசாதன டீகாவ

இருகல்குலதிலக்க தேரர் – கோகில சந்தேசிய

விதாகம மைத்திரி தேரர் – ஹங்ச சந்தேசிய

- இக்காலத்தின் பிரசித்தமான தூது இலக்கியங்கள் - குத்தில காவிய, பெரகும்பசிரித, லொவெடசங்கராவ, புதுகுனலங்கார
- கச்லகுணுமிணிமல போன்ற சாஸ்திர நூல்களும் எழுதப்பட்டுள்ளது.
- இக் காலத்தில் வெளிநாட்டு பண்டிதர்களும் கல்வி நிலையங்களோடு தொடர்புகொண்டிருத்தமை பற்றி தகவல் கிடைத்துள்ளது. பாரத தேசத்தின் பண்டிதரான ஸ்ரீராமசந்திர பாரதி (பக்தி சதகம், உத்தமலாபாவ போன்றவற்றை எழுதியுள்ளார்)
- ஏழாம் புவனேகபாகு மன்னனுடைய குறுகிய கால ஆட்சிக்காலம் வரையிலும் இலக்கியம் வளர்ச்சியடைந்த போதிலும் பின்னர் ஏற்பட்ட அரசியல் உறுதிப்பாடு இல்லாமை மற்றும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பால் இவை நிலைக்குலைந்து போயின.

**(08 புள்ளிகள்)**

## பகுதி - C

**(06)**

**i. கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு போர்த்துக்கேயரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை விளக்குக.**

**ii. அந்த முயற்சிகள் தோல்வியடைந்தமைக்குக் காரணமாக அமைந்த விடயங்களைப் பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)**

**i. கண்டி இராச்சியத்தை கைப்பற்றுவதற்கு போர்த்துகேயரால் மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக**

போர்த்துகேயர் இலங்கைக்கு தமது வர்த்தம் மற்றும் சமய நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்வதற்காக வருகைதந்தனர். இலங்கையில் நிலவிய அரசியல் பூசல்களை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தமது அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தனர்.

- மலையகயத்தில் ஜயவீர என்ற ஆட்சியாளன் காலத்தில் நிலவிய அரசியல் அதிகார போட்டியினால் மலையக இராசதானிக்கும் போர்த்துகேயருக்கும் இடையிலான தொடர்பு ஏற்பட்டது.
- போர்த்துகேயர் மலையகத்தை ஆக்கிரமிப்பதற்கு அரசியல் காரணி பிரதானமாக அமைந்தது. கோட்டை இராசதானியை கைப்பற்றிக்கொண்ட பின் மலையகத்தில் சுயதீன அரசின் அச்சுறுத்தல், மலையக அரசர்கள் ஒல்லாந்தருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சி, கரையோர பிரதேச மக்கள் மலையக அரசனை தமது ஆட்சியாளனாக கருதியமை, மற்றும் அரசன் போர்த்துகேயரின் ஆட்சி பிரதேசங்களில் உள்நாட்டு கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கிமை போன்ற காரணிகள் செல்வாக்கு செலுத்தியது.
- கி.பி. 1550 ம் ஆண்டு போர்த்துகேயர் மலையகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு தோல்வியடைதல்.
- முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் ஆட்சிகாலம் மற்றும் அதன் பின்னர் போர்த்தகேயர் மலையகத்தை 04 தடவைகள் ஆக்கிரமித்தனர்.

**1)1594 தந்துரே போர்**

இக்காலப் பகுதியில் மலையகத்தை முதலாம் விமலதர்மசூரியன் ஆட்சி செய்தான். இக்காலத்தில் போர்த்துகேய கபிதான் ஜெனரலாக பேரோ லோபேஸ் டி சுசூசா காணப்பட்டார். போர்த்துகேயரின் படைகள் பின்வாங்கும் சந்தர்ப்பத்தில் முதலாம் விமலதர்மசூரியன் தந்துரே என்ற இடத்தில் கபிதான் ஜெனரல் சூசா உள்ளிட்ட போர்த்துகேய தளபதிகளை முழுமையாக அழித்தான். இது போர்த்துகேயர் கீழேதேசத்தில் கடும் தோல்வியடைந்த ஒரு சந்தர்ப்பமாகும்.

**2) 1603 பலன போர்**

1603 ம் ஆண்டு ஜனவரி மாதம் இப் போர் நடைப்பெற்றது. இக் காலத்தில் போர்த்துகேயர் கபிதான் ஜெனரல் ஜெரனிமோத அசவேது காணப்பட்டார். சீமன் பிஞ்ஞோ மற்றும் சமரகோன் போன்றோர் போரை வழிநடத்தினர். போர்த்துகேயருடன் இருந்த கரையோர சிங்க இராணுவம் மலையக அரசனுடன் ஒன்று சேர்ந்து போர்த்துகேயரை தாக்கினர். இதனால் போர்த்துகேயர் பலன கோட்டையை கைவிடநேர்ந்தது.

**3) 1630 ரந்தனிவெல போர்**

இக்காலத்தில் செனரத் மன்னன் மலையகத்தின் அரசனாக இருந்தான். இந்த போரை போர்த்துகேய கபிதான ஜெனரல் கொண்ஸ்தந்து சூசா முன்னெடுத்தான். போர்த்துகேயரின் கீழ் இருந்த லஸ்கரின் படையின் சில சிங்கள பிரதானிகள் மலைய அரசனோடு இணைந்துகொண்டதோடு அதிக மழை காரணமாக போர்த்துகேயரின் இராணுவத்திற்கு பலம் குறைவடைந்தது. இச் சந்தர்ப்பத்தில் போர்த்துகேய படைகளை ரந்தனிவெல பகுதியில் இரண்டு நாட்கள் சுற்றிவளைத்து போரை நடாத்தினான். இதில் மகஅஸ்தான ராஜகுமாரன்

தலைமையிலான மலையக படையினர் வெற்றி பெற்றனர். இப் போரில் கொண்ஸ்தந்து சூசா கொலை செய்யப்பட்டான்.

**4) 1638 கன்னொறுவ போர்**

இக் காலத்தில் இரண்டாம் ராஜசிங்கன் மலையகத்தை ஆட்சி செய்தான். தியோகத மேலோ டி கெஸ்ரோ போர்த்துகேய கபிதான் ஜெனரராக இருந்தான். இப் போர் 1638 மார்ச் மாதம் இடம்பெற்றது. செங்கடகலையை கைவிட்டு கன்னொறுவையில் பாதுகாப்பு கருதி இருந்த இரண்டாம் இராஜசிங்கன் உள்ளிட்ட சிங்கள படையினர் போர்த்துகேய படைகளை சுற்றிவளைத்து அனைவரையும் கொலை செய்தனர்.

**ii. அந்த முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு காரணமாக அமைந்த விடயங்களைப் பரிசீலிக்குக**

- மலையகத்தில் காணப்பட் இயற்கை அமைவிடம் ( மலை அரண், வன அரண், நீர் அரண்)
- மலையகத்தில் கொரில்லா போர் முறையை கையாண்டமை
- முதலாம் விமலதாமசூரியன் மன்னன் மற்றும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மலையக ஆட்சியாளர்கள் உறுதியான ஆட்சியை மேற்கொண்டமை
- இவர்களுக்கு மலையக மக்கள் மட்டுமன்றி கரையோர பிரதேச சிங்கள மக்களும் சார்பாக இருந்தனர்.
- போர்த்துகேயர் தமது யுத்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திய லஸ்கரி படையினர் முக்கிய சந்தர்ப்பங்களில் மலையக அரசருக்கு உதவியமை
- மலைய அரசர்கள் திறமை மற்றும் சாதூரியமானவர்களாக காணப்பட்டனர். (முதலாம் விமலதர்மசூரியன், இரண்டாம் ராஜசிங்கன்)

**(16 புள்ளிகள்)**

**(07) "கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் இலங்கையில் அரசியல், நிர்வாகம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் நீண்ட கால மாற்றங்கள் பலவற்றை ஏற்படுத்தியது."**

**i. கோல்புறூக் அவர்கள் வருகைதந்தபோது இலங்கையில் இருந்த பிர்தானிய அனுநரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)**

**ii. அக்காலத்தில் நிலவிய நீதிமன்ற முறை பற்றிய விடயங்களத் தேடி ஆராய்த ஆணையாளரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)**

**iii. கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவை நியமிப்பதற்குக் காரணமான விடயங்களை சுருக்கமாக எடுத்துக்காட்டுக. (04 புள்ளிகள்)**

**iv. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் விளைவாக அரசியல் யாப்பு, நிர்வாகம் பொரளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக**

**(10 புள்ளிகள்)**

**i. கோல்புறூக் அவர்கள் வருகைதந்தபோது இலங்கையில் இருந்த பிர்தானிய அனுநரின் பெயரைக் குறிப்பிடுக.**

- எட்வட்பாண்ஸ் **(01 புள்ளி)**

**ii. அக்காலத்தில் நிலவிய நீதிமன்ற முறை பற்றிய விடயங்களத் தேடி ஆராய்த ஆணையாளரின் பெயரைக் குறிப்பிடுக.**

- சார்ள்ஸ் கமரன் **(01 புள்ளி)**

**iii. கோல்புறூக் - கமரன் ஆணைக்குழுவை நியமிப்பதற்குக் காரணமான விடயங்களை சுருக்கமாக எடுத்துக்காட்டுக.**

- எட்வட்பாண்ஸ் ஆளுநர் காலத்தில் கோப்பி பயிர்செய்கையினை மேற்கொள்வதற்கு பிரிதானியாவில் இருந்து வர்த்தகர்கள் சிலர் வருகைதந்தனர். இவர்கள் இலங்கையில் நிலவிய முறையற்ற ஆட்சி தொடர்பாகவும் ஆங்கில ஆட்சியாளர்களின் அதிக செலவு தொடர்பாகவும் அடிக்கடி பிரித்தானியா பாராளுமன்றத்தில் குறிப்பிட்டனர்.
- இலங்கையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட வரிகளில் இருந்து அரச செலவுகளை குறைத்துக்கொள்ள முடியாமையினால் வருடாந்தம் பெருமளவிலான தங்கபவுண்களை பிரித்தானியா திறைசேரியில் இருந்து இலங்கை பெற்றுக்கொண்டது. ( குடியேற்ற நாடுகள் பிரித்தானியா அரசுக்கு சுமையாக இருந்தமை) இந் நிலமை பிரித்தானியா பாராளுமன்றத்தில் விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டது.
- இவ்வாறான பின்னணியில் இலங்கையின் நிர்வாகம், வரவு செலவு, அரச நிறுவனங்கள், நீதி துறை போன்ற துறைகளை கண்காணித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு மற்றும் இலங்கையில் இருந்து கிடைக்கும் வருமானம் உரிய முறையில் நிதி நிர்வாகம் செய்வதற்கான யோசனைகைளை பிரித்தானிய அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்வதற்கும் இந்த ஆணைக்குழுவை நியமித்து அனுப்பினர்.

**(04 புள்ளிகள்)**

**iv. கோல்புறூக் - கமரன் சீர்திருத்தங்களின் விளைவாக அரசியல் யாப்பு, நிர்வாகம் பொரளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை விமர்சன ரீதியாக பரிசீலிக்குக**

**அரசியல் அமைப்பு**

- இதுவரை காலம் தனி தனி நிர்வாகமாக காணப்பட்ட கரையோரப் பிரதேசங்களும் மலைநாட்டு பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு ஒரே நிர்வாகத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. (ஒரே ஆட்சி முறையினை ஏற்படுத்தல்)
- ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டது.
- ஆளுநரின் ஆட்சிக்கு உதவும் நோக்கில் சட்டவாக்க கழகம், சட்டநிருவாகக் கழகங்கள் என இரு கழகங்கள் அமைக்கப்பட்டது. சட்டவாக்க கழகத்தில் ( 09 பேர் உத்தியோகச் சார்புள்ளோர், 06 பேர் உத்தியோகச் சார்ப்பற்றோர் என்ற வகையில் உத்தியோகத்தோர்களை நியமித்தல் மற்றும் ஆலோசனை சபையாக செயற்படுதல்) இச் சீர்திருத்தமே எதிர்கால பாராளுமன்ற முறைக்கு வித்திட்டது.

**நிர்வாகம்**

- முழு நாட்டையும் ஒரே ஆட்சியின்கீழ் கொண்டு வந்து பிரதான ஐந்து மாகாணங்கள் உருவாக்கப்பட்டு அதற்கு பொறுப்பாக முகவர்களை நியமித்தனர். மாவட்டத்திற்கு உப முகவர்களையும் நியமித்தனர்.

சிவில் சேவையில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்கள் முக்கிய அம்சமாகும்.

ஒரு சில பதவிகள் இல்லாதொழித்து ஒருசில பதவிகள் ஒன்றிணைக்கப்பட்டது.

சிவில் சேவையாளர்களின் சம்பளத்தை குறைத்ததோடு ஓய்வூதியத்தையும் நிறுத்தினர்.

சிவில் சேவையாளர்கள் தனியார் வர்த்தகத்தில் ஈடுப்படுவதற்காக விதிக்கப்பட்ட தடையை தளர்த்தினர்.

இவ்வாறான சூழ்நிலையில் சிவில் வேவையாளர்கள் பெருந்தோட்ட பயிர்செய்கையில் ஈடுப்பட்டனர். பொதுமக்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையிலான தொடர்பு குறைவடைந்ததோடு சிவில் சேவையாளர்கள் தமது அதிகாரத்தை பெருந்தோட்டதுறையில் பிரயோகித்தமையினால் உள்நாட்டவர் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கினர்.

- அரசின் ஒருசில திணைக்களங்கள் மூடப்பட்டதோடு ஒரு சில திணைக்களங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அவை ஒரு அதிகாரியின் கீழ் கொண்டுவரப்பட்டது.

- ➢ இலங்கையில் நிர்வாக சேவையில் இணைந்துகொள்வதற்கான வாய்பை ஏற்படுத்துவதற்கு தேவையான கல்வி தகைமைகளை வழங்கும் நோக்கில் ஆங்கில கல்வியை விஸ்தரித்தனர்.

**பொருளாதாரம்**

- ➢ இதுவரை காலம் நிலவிய அரசின் ஏகபோக வர்த்தக உரிமையை ( உப்பு, முத்து, சாராயம், புகையிலை, கறுவா) போன்றவற்றை நீக்கினர். தனிநபர் வர்த்தகம் மற்றும் சுதந்திர வர்த்தகத்திற்கான அனுமதி வழங்கப்பட்டது.
- ➢ பெருந்தோட்ட துறை அபிவிருத்திக்கு தேவையான யோசனைகை முன்வைக்கப்பட்டன.

வெளிநாட்டு வர்த்தகர்களை இலங்கைக்கு வரவழைக்கும் நோக்கில் ஏற்றுமதி - இறக்குமதி தீர்வை வரிகளை விலக்கினர்.

வெளிநாட்டவர்கள் இலங்கையில் காணிகளை பெற்றுக்கொள்வதற்கு விதிக்கப்பட்ட தடைகளை நீக்கினார்கள்.

பெருந்தோட்ட துறையினருக்கு குறைந்த விலையில் காணிகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

- ➢ இலங்கையில் நடைமுறையில் இருந்த மரபு ரீதியான கட்டாய சேவையான ராஜகாரிய முறையை இல்லாதொழித்தமையினால் புராதன குளங்கள் மற்றும் அணைகளை பராமரிக்க முடியாமையினால் உள்நாட்டு விவசாயம் பாதிப்படைந்தது.

(10 புள்ளிகள்)

**(08) 19 ஆம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் ஏற்பட்ட தேசிய சமய மறுமலர்ச்சி இயக்கம் பற்றி பின்வரும் தலைப்புகளில் கீழ் ஆராய்க.**

i. சமய மறுமலர்ச்சி இயக்கம் எழுச்சி பெறுவதற்குக் காரணமான பின்னணி.

(08 புள்ளிகள்)

ii. சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய செயற்பாடுகள் (08 புள்ளிகள்)

**i. சமய மறுமலர்ச்சி இயக்கம் எழுச்சி பெறுவதற்குக் காரணமான பின்னணி.**

- ➢ பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப கால பகுதியில் வருகை தந்த மிஷனரி அமைப்புக்கள் இந்நாட்டில் சமயத்தை பரப்புவதை நோக்கமாக கொண்டிருந்தனர்.
  - லண்டன் மிஷனரி அமைப்புகள் ( கி.பி.1804 – 1805)
  - பெப்டிஸ்ட் மிஷனரி அமைப்புகள் ( கி.பி. 1812)
  - வெஸ்லியன் மிஷனரி அமைப்புகள் (கி.பி .1814 – 1815)
  - அமெரிக்கன் மிஷனரி அமைப்புகள் (கி.பி. 1816)
  - சேர்ச் மிஷனரி அமைப்புகள் (கி.பி 1818)

- ➢ 1815ம் ஆண்டு பிரித்தானியர் மலையகத்தை கைப்பற்றிய பின்னர் ஆட்சிக்கு வந்த ஆளுநர் ரொபட் பிரவுன்றிக் இந்நாட்டில் எந்தவொரு இடத்திலும் மிஷனரி சங்கத்தினருக்கு பாடசாலைகளை அமைப்பதற்கு அனுமதி வழங்கினார். ஆங்கில மொழி இப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டதால் அவை சமயவளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தது. இதில் கல்வி கற்ற இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கபெற்றது.
- ➢ கிருஸ்தவ சமயத்தை பரப்புவதற்கு மிஷனரிகள் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டன.
  - அரச அனுசரணையை பெற்றுக்கொண்டமை
  - மிஷனரி அமைப்புகள் போட்டி அடிப்படையில் செயற்பட்டமை
  - சமூக சேவைகளில் ஈடுபட்டமை
  - நூல்களை வெளியிட்டமை

- ஐரோப்பிய மதகுருமார்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழியை கற்றுக்கொண்டு ஆங்கில மொழியில் எழுதப்பட்டுள்ள தமது சமய நூல்களை சிங்கள மற்றும் தமிழ் மொழிக்கு மொழிபெயர்த்தனர்.
- சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் கல்வியை வழங்குவதன் மூலம் கிராம பாடசாலைகளை ஆரம்பித்து அவற்றை பரவல் அடையசெய்தனர்.
- வறியவர்களுக்கு உதவுதல், நோயாளிகளை பராமரித்தல் போன்ற சமூக சேவைகளையும் செய்தனர்.

➢ இவ்வாறான பின்னணியில் 19ம் நூற்றாண்டு அரை பகுதியில் உள்நாட்டு கலாச்சாரம், மொழிகள், மற்றும் சமயங்களுக்கு அரசு முக்கியத்துவம் செலுத்தவில்லை.

➢ அத்தோடு மதகுருமார்கள் உள்நாட்டு சமயம் மற்றும் கலாச்சாரங்களை விமர்சனம் செய்தனர்.

**(08 புள்ளிகள்)**

**ii. சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய செயற்பாடுகள்**

➢ தமது உரிமைகளை பெற்றுக்கொள்ளும் கால சூழ்நிலை தோன்றியுள்ளதை அறிந்துக்கொண்ட பௌத்த, இந்து, இஸ்லாமிய மதங்களின் தலைவர்கள் அதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தனர்.

➢ இவர்கள் முன்னெடுத்த செயற்பாடுகள் மூலம் சமய விழிப்புணர்வு ஏற்பட்டது. இதன் மூலம் 19ம் நூற்றாண்டின் பின்னரைப்பகுதியில் சமய மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுத்தது.

➢ கிருஸ்தவ மிஷனரிகள் மதத்தைப் பரப்புதல் மற்றும் பிரிதானிய ஆட்சிக் கொள்கையில் பௌத்தம், இந்து, இஸ்லாம் மதங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சவால்களுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த சமய மறுமலர்ச்சி இயக்கம் தோற்றம் பெற்றது.

➢ தேசிய அபிமானத்தையும் தேசிய இணக்கப்பாட்டடையும் வளர்ச்சியடைய செய்தல் மற்றும் தேசிய மரபுரிமைகளை கட்டியெழுப்புதல் போன்றன சமய மறுமலர்ச்சி இயக்கத்தின் நோக்கங்களாக இருந்தன.

**பௌத்த மறுமலர்ச்சி இயக்கம்**

- பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்தல்
  - ✓ பிரிவேனாக்களை அமைத்தல்
  - ✓ வாத விவாதங்களை நடாத்துதல்
  - ✓ நாடகங்களை அரங்கேற்றுதல்
  - ✓ சஞ்சிகைகளை எழுதுதல்
  - ✓ பத்திரிகைகளை வெளியிடுதல்
  - ✓ பௌத்த ஆங்கில பாடசாலைகளை ஆரம்பித்தல்
- கோகர்லி போன்ற மதகுருமார்கள் பௌத்த சமயத்தை விமர்சனம் செய்தமையால் அதற்கு பௌத்த சமய தலைவர்கள் பதிலளிப்பதற்கு முன்வந்தனர். இதற்கு பதிலளிக்கும் வகையில் மீகெட்டுவத்தே குணானந்த தேரர் கலந்துக்கொண்ட பாணந்துறை விவாதம் பிரசித்திபெற்றது.

- இந்த விவாதம் அமெரிக்காவில் பிரசித்தம் பெற்றமையினால் பிரம்மஞானவாதிகளின் கவனம் இலங்கை மீது திரும்பியது.
  உதாரணமாக ஒல்கொட் பிரபு மற்றும் பிலெவெஸ்கி அம்மையாரின் வருகை
- இந்நாட்டில் பிரம்ம ஞான சங்கம் தோற்றுவிக்கப்பட்டமையால் அது பௌத்த கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தது. (ஆனந்தா, மியுசியஸ், தர்மராஜா, நாலந்தா, காலி மஹிந்த கல்லூரி போன்ற பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது)
- பிரிவெனா கல்வி மறுமலர்ச்சியடைதல்
  1873 மாளிகாகந்த வித்தியோதய பிரிவேனா
  1875 பெலியாகொட வித்தியலங்கார பிரிவேனா

இது பல கல்விமான்களை உருவாக்கிய மத்திய நிலையம் ஆகும்.

- பௌத்த சமயத்திற்காக சிற்சில உரிமைகளை வென்றெடுத்தனர்.
  பௌத்த கொடி
  வெசாக் விடுமுறை தினம்
- புதிய விகாரைகளை கட்டுதல் மற்றும் தூபாராம, ருவன்வெலிசாய போன்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த பௌத்த விகாரைகளை புனர்நிர்மாணம் செய்தல்.

அநகாரிக்க தர்மபால – மகாபோதி சங்கம்

வலிசிங்க ஹரிச்சந்திர – அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை

➢ **இந்து சமய மறுமலர்ச்சி**
- ஆறுமுகநாவலர் முன்னோடியாக செயற்பட்டார்.
- அவர் 1872 ம் ஆண்டு சைவப் பிரகாச வித்தியாசாலை எனும் பாடசாலையை அமைத்து இந்து பிள்ளைகளுக்கு ஆங்கில கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தார்.
- தமிழ் மொழி இலக்கியம், கலாச்சாரம் மற்றும் கல்வி வளர்ச்சியை முன்னின்று செய்தார்.
- வண்ணார்பண்ணையில் அச்சகம் ஒன்றை ஆரம்பித்து இந்து சமய மறுமலர்ச்சிக்காக புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை அச்சிட்டு வெளியிட்டார்.

உதாரணமாக சைவ சமயத்தின் பழமையான புத்தகங்களை பாதுகாத்தல் மற்றும் புதிய புத்தகங்களை எழுதுதல்.

- பைபிளை தமிழில் மொழிபெயர்த்தார்.
- நாவலருடைய சொற்பொழிவு, ஆங்கில மொழி தேர்ச்சி போன்றன சமயமறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்தது.
- ஆங்கில கல்வி வளர்ச்சிக்கு நடவடிக்கை எடுத்தல்
- 1872 யாழ்பாண இந்து கல்லூரியை அமைத்தல்
- பல்வேறு சபைகளை உருவாக்குதல் - சைவ பிரகாச வித்தியாசாலை, சைவ பரிபாலன சபை

➢ **இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி**
- சித்திலெப்பை முன்னோடியாக செயற்பட்டார்.
- முஸ்லீம்கள் மத்தியில் ஆங்கில கல்வியை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்.
- 1882 முஸ்லீம் கல்வி சபையை உருவாக்கினார்.
- முஸ்லீம் நேசன் எனும் தமிழ் மொழிமூல பத்திரிகையை பிரசுரித்தார்.
- 1884 ம் ஆண்டு கொழும்பு சாஹிரா கல்லூரியையும், 1893ம் ஆண்டு கண்டியில் முஸ்லீம் பெண்கள் பாடசாலையை உருவாக்கி இஸ்லாமிய கல்வியை வளர்த்தார்.
- ஓராபிபாஷாவினால் இந்த சமய மறுமலர்ச்சிக்கு பாரிய அளவில் அனுசரனை கிடைக்கப்பெற்றது.
- ஆங்கிலம் மற்றும் அராபி மொழியை கற்பிப்பதற்கு முஸ்லீம்களை ஊக்கப்படுத்தியமை
- மத்ரஸா எனும் இஸ்லாம் சமய பாடசாலையை புனரமைத்தார்.
- சித்திலெப்பைக்கு பின்னர் டீ.பி.ஜாயா அவர்கள் முஸ்லிம்களின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் அக்கறையுடன் ஈடுப்பட்டார்.

**(08 புள்ளிகள்)**

**(09) பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டின் வரலாற்று முக்கித்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக**

**(i) ஒல்லாந்தரின் பொருளாதாரக் கொள்கை**

**(ii) 1818 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்**

**(iii) சிறிமா ஆர். டி. பண்டாரநாயக்க**

**(iv) 1978 அரசியல் யாப்பின் அடிப்படை அம்சங்கள்** **(08 x 2 = 16 புள்ளிகள்)**

**(i) ஒல்லாந்தரின் பொருளாதார கொள்கைகள்**

- ஒல்லாந்தரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட இரு பிரதான பொருளாதார நோக்கங்கள்
    - ஐரோப்பிய சந்தையில் கேள்வி நிலவிய இந்நாட்டு வர்த்தக பொருட்களை பெற்றுக்கொள்ளுதல்
    - இலங்கையின் துறைமுகங்கள் அருகில் நிலவிய வர்த்தக ஆதிக்கத்தை முன்னெடுத்து செல்லல்.
- ஒல்லாந்தரின் கிழக்கிந்திய வர்த்தக கம்பனி மூலம் பொருளாதார நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன.
- இந்நாட்டின் கரையோர பகுதியில் மரபு முறையில் நிலவிய நிலவுரிமை, குல முறை, கட்டாய சேவை ராஜகாரிய முறை, சுதேச வரிமுறை (மரண வரி - (மராலபத்த), தென்னை வரி, ) போன்றவற்றின் மூலம் பொருளாதாரத்தை முன்னெடுத்து சென்றனர்.
- சில வர்த்தக பொருட்கள் மீது ஏகபோக உரிமைகளை பேணிவந்தனர் (கறுவா, யானைதாந்தம், முத்து, மாணிக்கம்)
- பிரதான வருவாய் தரும் பொருளாக பாக்கு முக்கியத்துவம் பெற்றது.
- மலையக இராச்சியத்துடன் உள்நாட்டு வர்த்தகத்தை பேணியமை (உப்பு, கருவாடு போன்றவற்றை மலையகத்திற்கும், அங்கிருந்து மிளகு, வெற்றிலை, கராம்பு, கறுவா, தேன் மெழுகு, தேன் போன்றவற்றையும் பெற்றுக்கொண்டனர்.
- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை முன்னெடுத்ததோடு ஆசிய வர்த்தக வலையமைப்புடன் தொடர்பு கொண்டிருந்தனர்.
- அரிசி இறக்குமதி செலவை குறைக்கும் நோக்கில் நெற்செய்கையை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தனர். (முத்துராஜவலயில் பயிரிடுதல், ஊறுபொக்க பிரதேசத்தில் குளங்களை புனரமைப்பு செய்தல்)
- பயிரிடுதல் ( கறுவா, பருத்தி, இன்டிகோ)
- போக்குவரத்திற்காக கால்வாய்களை பயன்படுத்தல் (எமில்டன் கால்வாய், பொல்கொட கால்வாய்)

**(08 புள்ளிகள்)**

**(ii) 1818 பிரித்தானியருக்கு எதிரான போராட்டம்**

- பிரித்தானியருக்கு எதிரான போராட்டம் என்பது 1817 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கம் 1818 ஒக்டோபர் மாதம் வரை மலையக பிரதேசத்தில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக ஆயும் ஏந்தி போராடியமையைக் குறிப்பிடலாம்.
- இப் போராட்டம் மலையகத்தில் இடம்பெற்றமைக்கான பல காரணிகள் உள்ளன
    - தேசிய அரசுரிமையை இழந்த மனவேதனை
    - பௌத்தசமயம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பது தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினை
    - 1815ம் ஆண்டு உடன்படிக்கையின்படி வழங்கப்பட்ட வாக்குறுதிகளின்படி பிரதானிகளின் அதிகாரம் மற்றும் சலுகைகள் பாதுகாக்கப்படாமை
    - தேசிய மொழி, கலாச்சாரம் பற்றிய விழிப்புணர்வு இல்லாது நிர்வாகம் மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளை பிரித்தானியர் முன்னெடுத்து சென்றமையினால் மலைநாட்டு நிர்வாகத்தில் சிக்கல் நிலை ஏற்பட்டது.

- ➢ போராட்டத்திற்கான உடனடிக் காரணி

சிங்கள பௌத்தர்கள் அதிகமாக வாழ்கின்ற வெல்லஸ்ச பிரதேசத்திற்கு மடிகே முகாந்திர பதவிக்கு ஹஜ்மரிக்கார் எனும் முஸ்லீம் ஒருவரை நியமித்தமை.

- ➢ போராட்டத்தின் தலைவர்கள்

மொணரவில கெப்பட்டிபொல, எல்லேபொல, மடுகல்ல, பிலிமத்தலாவ (இளையவர்), கிவுலேகெதர மொகட்டாலே, பூட்டாவேரட்டால, கொஹுகும்புரே ரட்டே ரால, திபுலான திசாவ, தபவின்ன திசாவ

- ➢ போராட்டம் பரவிய இடங்கள்

ஊவா-வெல்லஸ்ஸ, தும்பரை ஹேவாஹெட, ஹரிஸ்பத்து, மாத்தளை, நுவரொலியா, ஏழுகோறளை மற்றும் சப்ரகமுவையில் ஒரு சில பகுதிகளில்

- ➢ போராட்டம் ஆரம்பித்தல்
  - கொரில்லா போர் முறை மூலம் பிரித்தானிய இராணுவத்தை கடுமையாக தாக்குதல்
  - இயற்கை அமைவிடம், நோய்கள் பரவியமை என்பவற்றால் ஆங்கிலேயர் பாதிப்புற்றமை
  - இதனால் 1818ம் ஏப்ரல் மாதமளவில் பிரித்தானியர் மலையகத்தை விட்டுச் திரும்பிச் செல்ல எண்ணியமை.
- ➢ போராட்டம் தோல்வியடைதல்
  - முறையாக திட்டமிடப்படாத ஒரு போராட்டமாகும்.
  - பிரதேசங்களுக்கிடையிலான தொடர்பு இன்மை
  - போராட்ட தலைவர்கள் மத்தியில் நிலவிய பிரிவினை, மற்றும் கோபதாபங்கள்.
  - ஆங்கிலயர் பின்பற்றிய விளை நிலத்தை பாழாக்கும் கொள்கை மற்றும் இராணுவ சட்டம் (மார்ஷ லோ) நடைமுறைப்படுத்தியமை
  - அரசுரிமைக்கு சொந்தகாரன் என்ற துரைசாமி வனாஹி வில்பாவ பிரதேசத்தை சேர்ந்த சாதாரண மனிதன் எனவும் அவன் போலியான அரசன் எனவும் தெரியவந்தமை
  - போராட்டக்காரர்களால் மறைத்துவைக்கப்பட்ட தந்ததாது பிரித்தானியர் கைவசமாகியமை
  - 1818ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21ம் திகதிக்கு முன்னர் சரணடைபவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்தமை
  - ஒரு சில பிரதானிகள் பிரித்தானியருக்கு ஒத்துழைப்பு வழங்கியமை

- ➢ போராட்டத்தின் விளைவுகள்
  - போராட்ட தலைவர்களான கெப்பட்டிபொல, மடுகல, கொஹுகும்புரே ரட்டே ரால போன்ற பலருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.
  - எஹலபொல உள்ளிட்ட சிலரை நாடுகடத்துதல் மற்றும் சிறைவைத்தல்
  - 1818 ம் ஆண்டு கண்டி பிரகடனம் வெளியிடப்பட்டது.

**(08 புள்ளிகள்)**

### (iii) ஸ்ரீமாவோ ஆர்.டி. பண்டாரநாயக்க

- உலகின் மற்றும் இலங்கையின் முதல் பெண் பிரதமர்
- இவர் 1916 ஏப்ரல் மாதம் 17 ம் திகதி இரத்தினபுரி எல்லாவல வலவு குடும்பத்தில் மூத்தவராக பிறந்தார். தந்தையின் பெயர் பான்ஸ் ரத்வத்த, தாயின் பெயர் ரொசலின் ஹில்டா மவலதென்ன 1940 ம் ஆண்டு எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களை திருமணம் செய்து கொண்டதோடு அவர்களுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன
- அரசியல் சேவைகள்
  - 1956 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் திகதி எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்க அவர்களின் அகால மரணத்தை தொடர்ந்து அரசியலுக்கு பிரவேசித்தார்.
  - 1960 ம் ஆண்டு ஜூலை மாதம் பாராளுமன்ற பொது தேர்தலில் வெற்றிபெற்று அரசாங்கத்தை அமைத்தார்.
  - 1960 - 65 தேசியமயமாக்கும் திட்டத்திற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஆட்சி முறையொன்றை நடைமுறைப்படுத்தினார். (மக்கள்மயப்படுத்தல் முறையை மேலும் முன்னெடுத்து சென்றார்.)
  - 1962- அரசிற்கு எதிரான சதிதிட்டங்களை ஒழித்தார்.
  - 1970 – ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை அமைத்தார்
  - 1971 – ஜே.வி.பியின் கிளர்ச்சியை ஒழித்தார்.
  - 1972 – முதல் குடியரசு யாப்பை அறிமுகப்படுத்தினார்.
  - 1977 – பொது தேர்தலில் தோல்வியடைந்தார்.
  - 1980 – பிரஜாயுரிமையை இல்லாதொழித்தார்.
  - 1986 - ஸ்ரீ லாங்கா சுதந்திரக் கட்சி தலைமைத்துவத்தை மீண்டும் பொறுப்பேற்றார்.
  - 1986 – 1999 இடைப்பட்ட காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றுக்கொண்டார்.
  - 1994 – 2000 வரையிலான காலப்பகுதியில் பிரதமர் பதவியை ஏற்றார்.
- உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச தலைவர் என்ற ரீதியில் செயற்பாடுகளை முன்னெடுத்தார். (அணிசேரா இயக்கம் / இந்திய – சீனா பிரச்சினைகளை தீர்ப்பதில் பங்குப்பற்றினார்.
- 2010 ம் ஆண்டு ஒக்டோபர் மதம் 10ம் திகதி மரணமடைந்தார்.

**(08 புள்ளிகள்)**

### (iv) 1978 அரசியல் யாப்பின் அடிப்படை அம்சங்கள்

- 1977 ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற பொது தேர்தலில் 5/6 வீதம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரத்தை பெற்றுக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்கி பாரளுமற்றன்தில் அங்கிகாரத்தை பெற்றுக்கொண்டது. இது 1978 ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பு என்று அழைக்கப்பட்டது.

- யாப்பின் அடிப்படை அம்சங்கள்
  - நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை உருவாக்கியமை
  - அரசியல் அமைப்பின் 30 வது சரத்தின்படி ஜனாதிபதி அரசின் தலைவர் நிர்வாகத்தின் தலைவர் முப்படைகளின் தலைவராவார்.
  - ஜனாதிபதிக்குரிய அதிகாரங்கள் மற்றும் வரபிரசாதங்கள்
    - ✓ சட்டவாக்கம் தொடர்பான அதிகாரங்கள்
    - ✓ நிர்வாகம் தொடர்பான அதிகாரங்கள்
    - ✓ நீதித்துறை தொடர்பன அதிகாரங்கள் மற்றும் வரபிரசாதங்கள்
    - ✓ அரசின் தலைவர் என்ற வகையிலான அதிகாரங்கள்
  - பாராளுமன்றம்



Downloaded from Past Papers Wiki - Extensive collection of Past papers, Notes and much more!

பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட 225 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றம் தொடர்பிலான அதிகாரங்கள்.

- ✓ சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- ✓ நிதி நிர்வாகம்
- ✓ வரவுசெலவு திட்டத்தை உருவாக்குதல்
- ✓ அபிவிருத்தி திட்டங்களை உருவாக்குதல்

- ▪ பிரதமர் தலைமையிலான அமைச்சரவை

ஜனாதிபதியினால் ஆளும் கட்சியின் உறுப்பினர்களில் இருந்து பிரதமர் மற்றும் அமைச்சரவையை நியமித்தல்

அவர்களுக்குரிய அதிகாரங்கள் மற்றும் கடமைகள்

- ✓ பாராளுமன்றத்தினால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- ✓ குறித்த அமைச்சுக்களில் உள்ள வரவுசெலவு மதீப்பிடு மற்றும் இடைக்கால வரவு செலவு திட்டங்களை தயாரித்தல்.
- ✓ அமைச்சர்கள் பாராளுமற்றத்திற்கு கூட்டுபொறுப்பு உடையவர்கள்.

- ▪ நீதிமன்றம்

1978 அரசியல் அமைப்பின்படி சுயதீனமான நீதிமன்ற கட்டமைப்பை அறிமுகம்செய்தல்.

- ✓ உச்ச நீதிமன்றம்
- ✓ மேல்முறையீட்டு நீதிமன்றம்
- ✓ மேல் நீதிமன்றம்
- ✓ மாவட்ட நீதிமன்றம்
- ✓ மஜிஸ்ரேட் நீதிமன்றம்
- ✓ முதல்நிலை நீதிமன்றம்

- ▪ அடிப்படை மனித உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- ▪ புதிய தேர்தல் முறைகள்
  - ✓ விகிதாசார தேர்தல் முறை
  - ✓ ஜனாதிபதி தேர்தல்
  - ✓ மக்கள் தீர்ப்பு
- ▪ ஒம்புட்ஸ்மனை நியமித்தல்
- ▪ குற்றப்பிரேரணை தொடர்பான ஒதுக்கீடு

➢ இவ் அரசியல் யாப்பில் இதுவரை 21 சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(08 புள்ளிகள்)**

***

PAST PAPERS WIKI

(33) www.PastPapers.Wiki (33)


2024 A/L Tamil Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO


2024 A/L Political Science Past Paper Book (Tamil Medium)
රු 1,200.00
or 3 X රු 400.00 with KOKO


2024 A/L Islamic Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO


2024 A/L Islamic Civilization Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO


2024 A/L Geography Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO


2024 A/L Art Past Paper Book (Tamil Medium)
රු 500.00
or 3 X රු 166.67 with KOKO


2024 A/L SFT Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO


2024 A/L ICT Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO


2024 A/L ET Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO


2024 A/L BST Past Paper Book (Tamil Medium)
රු 800.00
or 3 X රු 266.67 with KOKO


2024 A/L Agricultural Science Past Paper Book (Tamil Medium)
රු 1,100.00
or 3 X රු 366.67 with KOKO


2024 A/L Common General Test Past Paper Book (Tamil Medium)
රු 600.00
or 3 X රු 200.00 with KOKO


2024 A/L Business Studies Past Paper Book (Tamil Medium)
රු 850.00
or 3 X රු 283.33 with KOKO


2024 A/L Accounting Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO


2024 A/L Economics Past Paper Book (Tamil Medium)
රු 900.00
or 3 X රු 300.00 with KOKO


2024 A/L Chemistry Past Paper Book (Tamil Medium)
රු 1,000.00
or 3 X රු 333.33 with KOKO


2024 A/L Biology Past Paper Book (Tamil Medium)
රු 750.00
or 3 X රු 250.00 with KOKO


2024 A/L Physics Past Paper Book(Tamil Medium)
රු 1,050.00
or 3 X රු 350.00 with KOKO


LOL STORE PVT LTD Copyright ©2023

We Using Safe Payment For
Easy Monthly Installments | KOKO | CASH ON DELIVERY | VISA